இந்த இடத்தில் விளம்பரம் செய்ய
அழையுங்கள் 416 841 9600

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

மலர்:- 28, 14 ஜனவரி 2022 இதழ்:- 38

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

BASKARAN
SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Critical Illness I No medical Life
Disability Income I Mortgage Life
Travel & Visitor I Life Insurances.
RRSP I RESP
Best Insurance for the
Lowest Rate !!!
Guna Thuraisingham
Super Visa Insurance
Dir: 416 528 1407
www.gtbrokers.ca

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BUY/SELL HOUSES
ARUL
THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE
TODAY REALTY LTD. BROKERAGE



## வைரஸ் மட்டும் தான் தோல்விகளுக்கு காரணமா?



## இந்தியாவுக்கு தோல்வியா?



## சீன வெளிவிவகார அமைச்சரின் இலங்கை விஜயமும் அரசியல் மாற்றங்களும்




# திருகோணமலை எரிபொருள் தாங்கிகள் உடன்படிக்கை கைச்சாத்து!

## 35 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தியாவுக்குக் கிடைத்த முதல் வெற்றி




இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்திக்கும் இலங்கை முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவிற்கும் இடையில் 1987ம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட இந்திய இலங்கை உடன்படிக்கையிலுள்ள சரத்தொன்று முதல் தடவையாக 35 வருடங்களின் பின்னர் நிறை வேற்றப்பட்டுள்ளது. இது இந்தியாவிற்கு கிடைத்த முதலாவது வெற்றி என இலங்கையின் அரசியல் ஆய்வாளர் ஜனகன் விநாயகமூர்த்தி தெரிவித்தார். (7ம் பக்கம் பார்க்க)

# யாழ்.நாகவிகாரை காணி சிவன் கோவிலுக்குச் சொந்தமானது

யாழ்ப்பாணம் நாகவிகாரை அமைந்துள்ள காணி யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை சிவன் ஆலயத்துக்கு உரித்தான காணி என வடக்கு மாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார். (5ம் பக்கம் பார்க்க)



## நாள் பார்த்தன தமிழ்க் கட்சிகள்! டில்லி பறந்தார் இந்தியத் தூதுவர்!

இந்த இடத்தில் விளம்பரம் செய்ய
அழையுங்கள் 416 841 9600

இந்த இடத்தில் விளம்பரம் செய்ய
அழையுங்கள் 416 841 9600

**கனடியத் தமிழ்ச் சமூகத்தின் ஆதரவோடு 10வது ஆண்டில் அறப்பணி!**
**போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்!**
**உறவுகளே! ஜனவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!**

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX
MORTGAGE ALLIANCE

# BUYING OR SELLING OR LEASE ! Residential or Commercial




## Team SIVA WILL BRING THE BEST RESULTS!

**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com



HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage INDEPENDENTLY OWNED AND OPERATED
Bus: 416.298.3200
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

### Keele/Finch

Toronto $499,900
Bedrooms: 2 Washrooms: 1
York University And New Lrt Line

### Driftwood/Finch


Toronto $699,000
Bedrooms: 3 Washrooms: 2
Fully Renovated, Brand New Kitchen

### Markham/Ellesmere


Scarborough $1,900
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept Layout

### Don Mills/Sheppard


Scarborough $2,200
Bedrooms: 1+1 Washrooms: 2
615Sqft+176 Sqft, Open Concept

### Hwy 401/ Weston Rd

Toronto $799,000
Bedrooms: 3+1 Washrooms: 3
Beautifully Renovated Home

### Salem & Rossland Rd

Ajax $1,059,000
Bedrooms: 4 Washrooms: 3
Potential Sep.Entrance For Basement

### Grandview /Woodstream

Oshawa $1,549,900
Bedrooms: 4 Washrooms: 4
Over 3,322 Sq Ft, Open Concept

### Midland Ave & Danforth

Scarborough Call for Price
Bedrooms: 3+1 Washrooms: 3
Totally Renovated In 2017





YOU'RE INVITED TO
THE fourme VIP
PREVIEW EVENT

GET PRIORITY ACCESS TO THE MOST ANTICIPATED RELEASE OF 2021

BRAND NEW RELEASE
STARTING IN THE 500s
EXTENDED DEPOSIT STRUCTURE • ASSIGNMENT
CAPPED DEVELOPMENT FEES • LEASE DURING OCCUPANCY

1151 MARKHAM RD
FOURME SALES CENTRE
SUNDAY NOV 21ST / 10A-6P

TO RSVP, EMAIL, DM OR CALL ME

### Birchmount /Ellesmere

Scarborough Call for Price
Bedrooms: 2 Washrooms: 2
Renovated With High Quality

### Midland/Eglinton

Scarborough $419,000
Bedrooms: 3 Washrooms: 2
Bright Unit With A Balcony

# PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரணஅறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 JAFFNA SUPER STORES**
**1221 MARKHAM RD - 14**
**(MARKHAM / EELESMERE)**

**3 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**4 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**5 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**6 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

**மொன்றியல் தொடர்புகளுக்கு**
**மார்சே துர்க்கா**
**(514) 276 9262**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.




**கியூபாவிற்கான சுற்றுலா**

கனடாவிலிருந்து குளிர்காலச் சுற்றுலாவுக்காக உங்களை பாதுகாப்பாக கியூபாவுக்கு அழைத்துச் செல்கின்றோம்.
உங்கள் விமானச் செலவு, தங்குமிட வசதிகள் உட்பட அனைத்துச் செலவு (Pakcage) உடன் மேலதிகமாக 400.00 டொலர்கள் மட்டுமே!
இத்தொகையில் ஊர்க்கோழி, ஆட்டுக்கறி, கடலுணவு வகைகள், நமது முறைப்படி சமைத்து நீங்கள் தங்கியிருக்கும் இடத்திற்கே கொண்டு வந்து தருவதுடன் குதிரைச் சவாரி, 5க்கும் மேற்பட்ட சுற்றுலாத் தலங்களையும் பார்வையிடலாம்.

முதியோருக்கான விசேட கவனிப்பு

மேலதிக விபரங்கட்கு - தவா
647.469.9839/647.333.0098

04 ஜனவரி 2022, 25 ஏப்ரல் 2022 இரண்டு சுற்றுலா குழு புறப்படுகின்றது. பதிவு செய்து கொள்ளுங்கள்

# இந்தியப் பிரதமருக்கான கடிதத்தை வழங்க நாள் பார்த்தன தமிழ்க் கட்சிகள்! டில்லி பறந்தார் இந்தியத் தூதுவர்!

இந்தியப் பிரதமருக்கான கடிதத்தை 11 ஜனவரி 2022 செவ்வாய்க்கிழமை அனுப்புவதாக இருந்தது. ஆனால் அஷ்டமி தினம் என்பதால் கடிதத்தை அனுப்புவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மறுத்து விட்டார் என்று நம்பகரமாக அறிய வருகின்றது. இதனிடையே, தமிழ்க் கட்சிகளின் கடிதத்தை பெற விருந்த இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே திங்கள் இரவு புதுடில்லி சென்று விட்டார். இதனால் அவர் வரும் வரை காத்திருக்கும் நிலைக்கு தமிழ்க் கட்சிகள் தள்ளப்பட் டுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான தமிழீழ விடுதலை இயக்கத்தின் ஏற்பாட்டில் தமிழ் மக்களின் அரசியல் பிரச்னையை தீர்க்கவும் 13ஆவது அரசமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்தவும் இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்குமாறு இந்தியப் பிரதமரை கோரும் விதமான கடிதவரைவு தயாரிக்கப் பட்டது.

இந்தக் கடிதத்தில் கையொப்பமிட மலையக, முஸ்லிம் கட்சிகள் பின் வாங்கிய நிலையில், வடக்கு, கிழக்கு தமிழ்க் கட்சிகளின் தலைவர் கள் மட்டும் கையொப்பமிட்டு அனுப்புவது என்று முடிவு செய்தன இந்த நிலையிலேயே அஷ்டமி தினம் என்பதால் கடிதத்தை அனுப்ப இரா. சம்பந்தன் மறுத்து விட்டார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, தயாரான கடிதத்தில் செவ்வாய்க்கிழமை காலையே தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா ஒப்பமிட்டார் என்றும் அறிய வருகின்றது.

இது இவ்வாறிருக்க இந்திய பிரதமருக்கான தமிழ்க் கட்சிகளின் கடிதத்தில் அனைத்து தலைவர்களும் கையெழுத்திட்டுள்ளனர். இந்தக் கடிதம் எதிர்வரும் 18 ஆம் திகதி இந்திய உயர் ஸ்தானிகரிடம் கையளிக்கப்படும் என்று தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம். பி. தெரிவித்துள்ளார்.

தமிழ்அரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா இந்தக் கடிதத்தில் கையொப்பமிட்டார். இதையடுத்து அனைத்து தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் இந்தியப் பிரதமருக்கான கடிதத்தில் கைச்சாத்திடும் நடவடிக்கை முற்றுப் பெற்றது.

எதிர்வரும் 18ஆம் திகதி ஜனவரி மாதம் இக் கடிதம் இந்திய தூதுவரிடம் கையளிக்க எதிர் பார்த்துள்ளோம் என்று செல்வம் அடைக்கலநாதன் கூறினார்.

# உலகில் முதன் முறையாக மனிதனுக்கு பன்றி இதயம்!



உலகில் முதன்முறையாக மனிதனுக்கு மரபணு ரீதியாக சில மாற்றங்கள் செய்யப்பட்ட பன்றியின் இதயத்தை பொருத்தி அமெரிக்க மருத்துவர்கள் சாதனை படைத்துள்ளனர். பன்றியின் இதயத்தை பொருத்தி இதய மாற்று அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட உலகின் முதல் மனிதன் என பெருமையை அமெரிக்கரான டேவிட் பென்னட்பால்டிமோர் என்பவர் பெற்றுள்ளார். ஏழு மணி நேரங்கள் நடந்த இந்த பன்றி இதயமாற்று அறுவை சிகிச்சைக்குப் பின்னர் கடந்த 3 நாட்களாக அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட நபர் நன்றாக இருக்கிறார் என்று மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

பென்னட்டின் உயிரைக் காப்பாற்றுவதற்கான கடைசி நம்பிக்கையாக இந்த மாற்று அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர் இதுவரை நலமாக இருக்கிறார். எனினும் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர் நீண்ட காலம் உயிர் வாழ வாய்ப்புகள் என்ன? என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

அறுவைச் சிகிச்சைக்கு ஒரு நாள் முன்பு 57 வயதான பென்னட் இறந்து விடுவார் அல்லது இந்த இதய மாற்று அறுவைச் சிகிச்சையை செய்ய வேண்டும் என்ற இரண்டு தெரிவுகளே இருந்தன. இது கடினமான தேர்வு என்று எமக்குத் தெரியும். ஆனால் வாழ்வா? சாவா (20ம் பக்கம் பார்க்க)

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்



**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**

# யாழ்ப்பாணம் இலங்கையின் வடபகுதி இலங்கைக்கு சீனா பாதுகாப்பு ஒத்துழைப்பை அதிகரிக்கும்

யாழ்ப்பாணத்திற்கான தனது விஜயம் மற்றும் யாழ்ப்பாணதீவுகளில் மின்சக்தி திட்ட் குறித்தும் கருத்து வெளியிட்டுள்ள சீன தூதுவர் கொவிட் நிலவரம் காரணமாகவே யாழ்ப்பாணத்திற்கான தனது விஜயம் தாமதமானது என தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் இலங்கையின் வடக்கில் இருக்கின்றது. எந்த நாட்டிற்கும் தெற்கில் இல்லை என சீன தூதுவர் தெரிவித்துள்ளார். மூன்று தசாப்தகால யுத்தம் வெற்றிகரமாக முடித்துவைக்கப்பட்ட பின்னர் வடபகுதிக்கு எவ்வாறு உதவலாம் என்பது குறித்து சீனா ஆர்வமாக உள்ளது எனவும் சீன தூதுவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்திற்கு ஆதரவளிக்காமல் பல நாடுகள் பின்வாங்கிய போது சீனா இலங்கைக்கு அவசியமான ஆயுதங்களையும் பயிற்சிகளையும் வழங்கியது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சீனாவிற்கு இரகசிய நிகழ்ச்சி நிரல் உள்ளது என்பதை நிராகரித்துள்ள தூதுவர் வடபகுதி மின்திட்டங்களை இரத்துச் செய்வதால் இலங்கைக்கு பாரதூரமான பாதிப்பு ஏற்படாலம் என தெரிவித்துள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் மூலம் முன்னெடுக்கப்படும் திட்டத்தை சீனாவின் தனியார் துறையினர் கேள்விப்பத்திர முறை மூலம் பெற்றுக்கொண்டனர் சீன தூதுரகத்திற்கு எந்த தொடர்பும் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்

இதேவேளை இலங்கையும் சீனாவும் பாதுகாப்பு ஒத்துழைப்புகளை மேலும் அதிகரிக்க வேண்டும இந்து சமுத்திரத்தின் ஸ்திரதன்மை மற்றும் செழுமைக்கு உதவியாக அமையும் என சீனா தெரிவித்துள்ளது. சீன வெளிவிவகார அமைச்சரின் விஜயத்தின் பின்னர் பத்திரிகையாளர்கள் சிலருடன் உரையாடியவேளை இலங்கைக்கான சீன தூதுவர் இதனை தெரிவித்துள்ளார்.



பாதுகாப்பு துறைகளில் முன்னேற்றம் மற்றும் பரிமாற்றங்கள் இருதரப்பு உறவுகளில் முக்கியமான விடயங்கள் என சீன தூதுவர் தெரிவித்துள்ளார். பாதுகாப்பு விவகாரங்களில் சீனாவும் இலங்கையும் இன்னமும் அதிகளவிற்கு இணைந்து செயற்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு ஒத்துழைப்பு, இறைமை பாதுகாப்பு ஸ்திரதன்மை ஆகிய விடயங்களில் இரு நாடுகளினதும் நலன்களிற்கு உதவியாக அமைவதுடன் மாத்திரமின்றி பிராந்தியத்தில் ஸ்திரதன்மையையும் செழுமையையும் பேணுவதற்கும் உதவப் போகின்றது என சீன தூதுவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையிலான பாதுகாப்பு உறவு அதிகரிப்பது என்பது பிராந்திய வல்லரசான இந்தியாவையும், இந்து சமுத்திரத்தில் புதிய பட்டுப்பாதை திட்டத்தின் கீழ் தனது நடவடிக்கைளை விஸ்தரித்துள்ள சீனாவை கண்காணித்து வரும் அமெரிக்காவையும் பதற்றத்திற்குள்ளாக்கும் என பாதுகாப்பு ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தனது கொல்லை புறத்தில் சீனாவின் பிரசன்னம் குறித்து இந்தியா ஏற்கனவே கரிசனை வெளியிட்டுள்ளது. சீனாவின் பாதுகாப்பு அமைச்சர் 2021 மே மாதம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவை சந்தித்தார் என்பதும் குறிபிபிடத்தக்கது.


# மக்களின் பிரச்சனையை பேச முடியாவிடின் பதவி விலகத் தயார் - நிமல் லன்சா தெரிவிப்பு

மக்களின் பிரச்சினைகளை கேட்க வேண்டும். அரசாங்கத்திடம் எடுத்துச் சொல்லவும் வேண்டும். மக்களின் பிரச்சினைகளை பேச முடியாவிடின், இராஜாங்க அமைச்சர் பதவியை தூக்கியெறிய தான் தயாரென இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா தெரிவித்தார். மக்களை வரிசைகளில் நிற்கவைத்து அலையவிட தேவையில்லை எனத் தெரிவித்துள் அவர், அதனை கண்டும் காணாதது போல இருக்க முடியாது என்றும் கூறினார்.



அரசாங்கத்தை விமர்சனம் செய்யும் அமைச்சர்கள், இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சர்களின் வார்த்தைகளில், மக்களின் குரலே ஒலிக்கின்றது. ஆகையால், விமர்சனங்களுக்கு அரசாங்கம் செவிசாய்க்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

நாடு, பொருளாதார சிக்கலுக்கு முகங்கொடுத்து கொண்டிருக்கின்றது. அதிலிருந்து மீண்டெழுவதற்கு சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லவேண்டும் என்றும் தெரிவித்த இராஜாங்க அமைச்சர், பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவில்லை என்றால், எதிர்காலத்தில் தானும் வீதிக்கு இறங்க வேண்டிய நிலைமை என்றும் தெரிவித்துள்ளார்.

ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா - அருள்மிகு


ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

14 ஜனவரி 2022 வெள்ளிக்கிழமை
பகல் 10.00 மணிக்கு தைப்பொங்கல்
விசேட பூஜை நடைபெறும்.
உபயம்:- பொன்.சிவா சந்தானலட்சுமி. குடும்பம்

14 ஜனவரி 2022 வெள்ளிக்கிழமை
பிரதோஷ விரதம்

14 ஜனவரி 2022 வெள்ளிக்கிழமை
இரவு ஐயப்பன் மகரஜோதி தரிசனம்

இரவுப் பூஜை மாலை 7.00 மணிக்கு ஆரம்பமாகும்

18 ஜனவரி 2022 செவ்வாய்க்கிழமை
தைப்பூசம்

விஷேட அபிஷேகமும் பூஜையும் காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

தைப்பூசத் தினத்தன்று பால் குடம் எடுக்க விரும்பும் அடியார்கள் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும் .

தைப்பூச பூஜையை உபயம் செய்ய விரும்பும் உபயகாரர் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

விஷேட ஐயப்பன் மண்டல பூஜை தினமும் நடைபெறுகின்றது.
ஐயப்ப படிகட்டு பூஜை செய்ய் விரும்பும் பக்தர்கள் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும் .

இவ்வண்ணம்:- ஆலய தர்மகர்த்தா சபையினர்

# யாழ்.நாகவிகாரை காணி சிவன் கோவிலுக்குச் சொந்தமானது

யாழ்ப்பாணம் நாகவிகாரை அமைந்துள்ள காணி யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை சிவன் ஆலயத் துக்கு உரித்தான காணி என வடக்கு மாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

டான் தமிழ் ஒளியில் ஒளிபரப்பான நெற்றிக்கண் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

நாகவிகாரை அமைந்துள்ள காணியின் ஆரம்பத்தில் சிங்கள வைத்தியர் ஒருவர் வசித்து வந்தார். அவர் அங்கிருந்து வைத்தியத் தொழிலையும் முன்னெடுத்து வந்தார். தனது வழிபாட்டுக்காக ஒரு அரசமரத்தை நட்டு வழிபாடுகளை மேற் கொண்டு வந்தார்.

அவர் வசித்த காணி எமது வண்ணார்பண்ணை சிவன் கோவிலுக்கு உரித்தான காணி. காணி ஆவணங்களைச் சீர்தூக்கிப் பார்த்தால் அதன் உண்மைகளை அறியலாம்.

சிலர் நாகவிகாரை காணி யாழ்.மாநகர சபைக்குரியது என்றும், சான்.சபாபதி வழங்கிய காணி எனவும் கூறி வருகின்றனர். அக்கருத்துக்கள் எல்லாம் பொய்யான கருத்துக்களாகும்.

அன்றைய காலத்தில் இந்துக்களுக்கும் பௌத்தர்களு க்கும் உறவு இருந்தது. அதன் அடிப்படையில் அந்த காணி வழங்கப்பட்டிருக்காலம் என நினைக்கின்றேன். தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்த மண்ணாகவும் எமது மண் உள்ளது. ஆனால் காணியின் பூர்வீகத்தை எடுத்துப் பார்த்தால் அது வண்ணார்பண்ணை சிவன் கோவிலுக்கு உரித்தான காணி. அது தெளிவாக எனக்குத் தெரியும்.

ஆரியகுளத்தில் அரசமைப்பை மீறியதாக ஆளுநர்



கடிதம் எழுதியிருப்பது தவறானது. ஆரியகுளத்தில் எந்த மத விடயங்களும் இருக்கவில்லை. இவ்வாறு இருக்க அரசமைப்பை மீறுவதாக ஆளுநர் மாநகர சபைக்கு எச்சரிக்கை விடுக்கவும் முடியாது -என்றார்.

இதன்போது வடக்கு மாகாண அவைத்தலைவராக ஆளுநருடன் ஆரியகுள விவகாரம் தொடர்பில் பேசி யிருக்கின்றீர்களா என தொகுப்பாளர் எழுப்பிய கேள்வி க்கு அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் இவ்வாறு பதிலளித்தார்.

இல்லை. அவர் தான் வந்த விடயங்களைப் பார்க்கின் றார். நான் எனது கடமைகளைச் செய்கிறேன். ஆளுநரின் செயற்பாடுகளில் தலையிட விரும்ப வில்லை. ஆனால் தமிழனாக, மாநகர சபையின் வரி யிறுப்பாளனாக, நீண்ட காலம் மாநகரத்துடன் தொடர் பில் இருந்தவன் என்ற வகையில் பார்த்துக் கொண் டிருக்க முடியாது என்றார்.

# யாழ். ஆரியகுளத்தை வைத்து அரசியல் நடத்த வேண்டாம்!



யாழ்.ஆரிய குளத்தில் என்ன விடயத்தை நான் கேட்டேன் என்பதை அறியாமல் ஆரியகுளத்தை வைத்து அரசியல் நடத்த வேண்டாம் என வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா கோரிக்கை விடுத்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரி வித்ததாவது.

விகாராதிபதியால் ஆரிய குளத்தில் மத நல்லிணக்க மண்டபம் ஒன்றை அமைத்து தருமாறு மாநகர சபையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. அதனை அவர்கள் மறுத்து விட்டார்கள். நான் யாழ். மாநகர முதல்வரிடம் ஆரிய குளத்தில் அதிகாலை வேளையில் உடற்பயிற்சி மற்றும் யோகாவை மேற் கொள்பவர்களு க்கு இலகுவாகவும் மத நல்லிணக்கத்தின் ஓர் அங்க மாக மதங்களின் பாடல்களை இசைப்பதற்கு எனது விருப்பத்தை தெரிவித்தேன்.

முதல்வர் சபையுடன் கதைத்து பதில் சொல்வதாக தெரிவித்த நிலையில் பதில் கிடைக்காததால் ஆரிய குளம் யாருக்கு சொந்தம் என கேள்வி கேட்க வேண்டிய நிலை ஏற்பட்டது. நான் இந்து மதத்தைச் சேர்ந்தவனாக இருக்கின்ற நிலையில் ஏனைய மதங் களையும் சம உரிமையுடன் பாதுகாப்பேன்.

கண்டி தலதா மாளிகையில் அழகிய மகாவிஷ்ணுவின் உருவச்சிலை இருக்கின்றது. அதற்கு பூ வைத்து வழிபடுகின்றார்கள். அதேபோல் யாழ். நாக விகாரை யிலும் இந்து மத கடவுள்களின் உருவப்படங்களை வைத்து வழிபடுகின்றார்கள். நான் ஆரிய குளத்தில் பௌத்த மயமாக்கலை மேற்கொள்ளப் போகிறேன். மத அடையாளங்களை நிறுவப் போகிறேன் என்ற பொருள் கோடலில் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றது. ஆரியகுளம் யாழ். நகரப்பகுதியில் அமைந்துள்ளதால் அதிகாலை வேளையில் உடற்பயிற்சி செய்பவர்கள், யோகா செய்பவர்கள் ஒன்று கூடும்போது இறையியல் பாடல்களை ஒலிப்பது மன அமைதியை ஏற்படுத்தும் என்ற நோக்கத்திலேயே முதல்வரிடம் கூறினேன்.

ஆரிய குளத்தில் மதங்களின் இறையியல் பாடல்களை இசைப்பது மத குரோதங்களை ஏற்படுத்தாது. இதை அரசியலாக்குபவர்களால் தான் தேவையற்ற குழப்பம் ஏற்படுகிறது. மத நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு ஆரியகுளம் மட்டும்தான் இடம் அல்ல.

நான் எனது செயற்பாட்டில் உறுதியாக இருக்கிறேன். வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களி லும் மத நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்வேன். ஆகவே வடக்கில் மத நல்லிணக்கத்தின் முன்னோடியாக ஆளுநர் செயலகத்திலிருந்து எனது செயற்பாடுகளை ஆரம்பிப் பேன் என்றும் தெரிவித்துள்ளார்.

# தீர்வை அடையும் வழி

2009இற்கு பின்னரான தமிழ் தேசிய அரசியல் சூழ லில் பாரபட்சமில்லாமல் அனைத்துத் தமிழ்த் தேசிய கட்சிகளும் அரசியல் தீர்வு தொடர்பில் பேசி வரு கின்றன. தாங்களே கொள்கையில் உறுதியானவர்கள் என்பதை காண்பிப்பதில் முட்டிமோதிக் கொள்கின் றன. தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சமஷ்டி அடிப்படை யிலான அரசியல் தீர்வு தொடர்பில் பேசி வருகின்றது. கூட்டமைப்பின் மீது குற்றச்சாட்டுக் களை முன் வைத்து வரும் தரப்பினரோ எந்தவோர் அரசியல் தீர்வும், தமிழர்கள் ஒரு தேசம் என்பதை அங்கீகரிப்பதாக இருக்க வேண்டுமென்கின்றனர். கட ந்த இரு மாதங்களாக 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் சிலர் பதற்றமடைவதை காண முடிகின் றது.

இவ்வாறு எதிர்ப்பவர்களும் விமர்சிப்பவர்களும் மறு புறம் மாகாண சபைதேர்தல் எப்போது வருமென்று காத்திருக்கின்றனர். இது அடிப்படையிலேயே நேர்மையற்ற செயலாகும். மாகாண சபை தேர்தலில் போட்டியிடும் கட்சிகளுக்கு ஏன் மக்கள் வாக்களிக் கின்றனர்? மாகாண சபையை பயன்படுத்தி ஏதாவது நல்ல காரியம் நடக்குமென்னும் நம்பிக்கையின் அடிப்படையிலேயே மக்கள் வாக்களிக்கின்றனர். ஆனால் மாகாண சபையில் கதிரைகளுக்காக அடி பட்டுக் கொண்டு அதன் மூலம் கிடைக்கும் தனிப் பட்ட வரப்பிரசாதங்களை அனுபவித்துக் கொண்டு, அதனால் பயனில்லை என்று கூறுவது எந்தவகையில் நேர்மையான அரசியல்?

இப்போது அரசியல் தீர்வு விடயத்திற்கு வருவோம். 1949இல், இலங்கை தமிழ் அரசு கட்சி உருவாக்க ப்பட்டது. தமிழ் மக்கள் மத்தியில் தமிழ் அரசு கட்சி யென்று அறியப்பட்ட இக் கட்சி, சிங்களவர்கள் மத்தி யில் சமஷ்டி கட்சியென்றே அறிமுகம் செய்யப் பட்டது. இந்த அடிப்படையில் நோக்கினால், தமிழ் மக்களின் சமஷ்டி கோரிக்கைக்கு சுமார் 73வருட கால வரலாறுண்டு. ஆனால், இன்றும் நாம் சமஷ்டி பற்றி பேசிக் கொண்டு தானே இருக்கின்றோம்? ஏன்? ஏனென்றால் எங்களால் அதைக் கடந்த 73 வருடங் களில் அடைய முடியவில்லை. இனி எப்படி அடை யப் போகின்றோம்?

1976இல் வட்டுக்கோட்டை தீர்மானத்தை நிறை வேற்றிய தமிழ்மிதவாத தலைவர்களிடம், தனி நாட்டை எப்படி அடைவது என்னும் கேள்விக்கு பதிலிருக்கவில்லை. இந்த நிலையில் தான் விடுதலை இயக்கங்கள் தமிழர் அரசியலை கையிலெடுத்தன. அதுவே, பின்னர் விடுதலைப் புலிகள் தலைமையில் ஒரு பெரும் இயக்கமாக வளர்ச்சியுற்றது. விடுதலைப் புலிகளின் மௌனிப்புடன், இயக்க அரசியலின் கதை யும் முடிவுக்கு வந்தது. இப்போது என்ன செய்வது?

இந்த கேள்வியுடன் தான் போரில்லாத, கடந்த பன்னி ரெண்டு வருடங்கள் நம்மை சதாரணமாக கடந்து சென்றிருக்கின்றன. இந்த பன்னிரெண்டு வருடங் களில் பல்வேறு விடயங்கள் தொடர்பில் விவாதிக்க ப்பட்ட போதும், எதுவும் வெற்றியளிக்கவில்லை. ஒவ்வொரு தேர்தல் மேடைகளிலும் சர்வதேச அழுத் தங்கள் தொடர்பில் கவர்ச்சிகரமான சுலோகங்கள் உச்சரிக்கப்பட்டன. ஆனால், அனைத்தும் புஸ்வாண மாகியதே இதுவரையான கதை.

1976இல் வட்டுக் கோட்டைத் தீர்மானத்தை நிறை வேற்றிய போது எவ்வாறு – அன்றைய மிதவாதிகள், தனி நாட்டை அடையும் வழி தெரியாது விழி பிது ங்கி நின்றனரோ – அப்படித்தான் இப்போதும். சமஷ்டி, ஒரு நாடு இரு தேசம், கூட்டு சமஷ்டி – இப்படியான சொற்களுடன் கொள்கை தொடர்பில் மேடைகளில் பேசுவோர் இருக்கின்றனர்.எனவே, ஒன்றை எதிர்க்கும் போது, அதனை விடவும் சிறந்த ஒன்றை அடைவதற்கான மாற்று வழிகளை மக்கள் முன்னால், வைக்க வேண்டும். அது முடியாவிட்டால், இன்றைய சூழலில் எது சாத்தியமோ அதன் மூலம் முன்நோக்கி பயணிப்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும். அரசியல் என்பது சாத்தியங்களை கையா ளும் கலை என்பார்கள்.


Real Estate Law
Immigration Law
Wills and Estate
Power of attorney for personal care and property
Business Law

Notary Services
Statutory Declarations & Affidavits
Commissioning & Notarization

NISHANTHAN LAW OFFICE

Phone : 416-289-9229

Umananthini Nishanthan
BARRISTER, SOLICITOR & NOTARY PUBLIC



1200 Markham Road, Lower Level Units 5 and 7, Scarborough, Ontario M1H 3C3 (Markham/ Ellesmere)

# இலங்கையில் தமிழ் - சிங்கள மொழிகளை பின் தள்ளி சீனமொழி ஆதிக்கம் ஓங்குகிறதா?

இலங்கையில் சீன வெளி விவகார அமைச்சர் வாங் யி மேற்கொண்ட அரசுமுறை பயணத்தின் போது அவர் நாட்டின் அதிபர், பிரதமருடன் பங்கேற்ற அரசு நிகழ்ச்சியில் தேசிய ஆட்சி மொழிகளான சிங்களம், தமிழ் ஆகியவற்றில் எந்த குறிப்போ விளம்பங்களோ இடம் பெறாதது பலரது புருவங்களையும் உயர்த்தியிருக்கிறது. இதன் மூலம் இலங்கையில் சீன மொழியின் ஆதிக்கம் இலங்கை மண்ணில் ஓங்குகிறதா என்றும் சிலர் கேள்வி எழுப்பியுள்ளனர்.

சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி, இலங்கைக்கு ஒரு நாள் விஜயத்தை மேற் கொண்டு, பல்வேறு சந்திப்புக்களை நடத்திய பிறகு உடனடியாக அவரது தாயகத்துக்கு திரும்பியிருக்கிறார்.

இந்த நிலையில் சீனாவின் முதலீட்டில் நிர்மாணிக்கப்பட்டு வரும் கொழும்பு துறைமுக நகரின் சில திட்டங்களை சீன வெளிவிவகார அமைச்சர் நேற்றைய தினம் (ஜனவரி 9) திறந்து வைத்தார். உடற்பயிற்சி நடைபாதை மற்றும் சிறு படகு பிரிவு ஆகியன சீன வெளிவிவகார அமைச்சரினால் 09 ஜனவரி 2022 அன்று திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஸ, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஸ உள்ளிட்ட மேலும் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த உடற்பயிற்சி நடைபாதை மற்றும் சிறு படகு பிரிவு ஆகியன திறந்து வைக்கும் நிகழ்வின் போது, காட்சிப் படுத்தப்பட்டிருந்த பதாகை குறித்து தற்போது அதிகளவில் பேசப்படுகின்றது. இவ்வாறு காட்சிப்படுத்தப்பட்டிருந்த




பதாகையில், ஆங்கிலம் மற்றும் சீன மொழி மாத்திரம் அச்சிடப்பட்டிருந்தன. இலங்கையின் அரச கரும மொழியாக அரசியலமைப்பில் ஏற்றுக 'கொள்ளப் பட்டுள்ள சிங்களம் மற்றும் தமிழ் ஆகியன எந்தவொரு இடத்திலும் காட்சிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

அரச நிகழ்வொன்றில், அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அரச கரும மொழிகளுக்கு முன்னுரிமை வழங்காது, அரசியலமைப்பில் இல்லாத ஒரு மொழிக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளமை பாரிய சர்ச்சைக்குரிய விடயம் என அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இந்த சர்ச்சை தொடர்பில் முன்னாள் அரச கரும மொழிகள் அமைச்சரும், இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், தனது டுவிட்டர் தளத்தில் பதிவொன்றை வெளியிட்டுள்ளார். எங்கே எங்கள் இரண்டு ஆட்சி தேசிய மொழிகள்? அல்லது துறைமுக நகர் முழுமையாக சீனாவின் சொத்தா? எமது 65 நட்புறவை இப்படிதான் கொண்டாடுவதா? யாருக்கு பொறுப்பு, அக்கறை..? ஒருவருக்கும் வெட்கமில்லை..! தேசத்திடம் மன்னிப்பு கோருங்கள்..! என மனோ கணேசன் தனது டுவிட்டர் பதில் கூறியுள்ளார்.

கொழும்பிலுள்ள சீன தூதரகம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஸ மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஸ ஆகியோரை டெக் செய்து, இந்த பதிவை மனோ கணேசன் வெளியிட்டுள்ளார்.

இந்த நிலையில், கொழும்பிலுள்ள சீன தூதரகம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ ஆகியோரே, தேசத்திடம் மன்னிப்பு கோர வேண்டும் என மனோ கணேசன் கூறினார்.

இலங்கையில் தமிழ் மொழி புறக்கணிப்பானது தொடர்ச்சியாகவே முடிவின்றி இடம்பெறும் ஒன்றாக காணப்படுகின்றது. அரசியலமைப்பில் தமிழ் மொழி கட்டாயப்படுத்தப்பட்டுள்ள போதிலும், அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், வீதி சமிக்ஞைகள், பெயர் பலகைகள் என அனைத்து இடங்களிலும் தமிழ் மொழி புறக்கணிக்கப்படுகின்றது.

அவ்வாறு தமிழ் மொழி காட்சிப்படுத்தப் பட்டிருந்தாலும், அநேகமான இடங்களில் அவற்றில் நிச்சயம் தமிழ் பிழைகள் இருப்பதை அவதானிக்க முடிகின்றது.இந்த நிலையில் இலங்கையில் சீனாவினால் முன்னெடுக்கப்படும் திட்டங்களில் தமிழ் மொழி கடந்த காலங்களிலும் புறக்கணிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு இலங்கையில் தமிழ் மொழி தொடர்ச்சியாக புறக்கணிக்கப்பட்டு வந்த பின்னணியில், 09 ஜனவரி 2022 நடத்தப்பட்ட நிகழ்வில் சிங்கள மொழியும் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் படிப்படியாக தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டு, சீன மொழி உள்வாங்கப்பட்டு வந்த நிலையில், தற்போது சிங்கள மொழியும் புறக்கணிக்கப்பட்டு முழுமையாகவே சீன மொழியின் ஆதிக்கம் உள்வாங்கப்பட்டுள்ளது.

அரச நிகழ்வொன்றில் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகள் புறக்கணிக்கப்பட்டிருக்குமானால் அதனை சரி செய்ய வேண்டும் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் டளஸ் அழகபெரும தெரிவித்தார். அரச மொழிகள் புறக்கணிக்கப்படுகின்றமை, பாரிய குறைபாடு எனவும் அவர் கூறினார்.

இவ்வாறான நிகழ்வுகளில் கட்டாயம் அரச கரும மொழிகள் உள்ளடக்கப்பட வேண்டும். இதனுடன் தொடர்புடையவர்களுக்கு இது குறித்து அறிவிக்கின்றேன்' எனவும் டளஸ் அழகபெரும தெரிவித்தார்.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224,** Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# திருகோணமலை எரிபொருள் தாங்கிகள் உடன்படிக்கை கைச்சாத்து! 35 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தியாவுக்குக் கிடைத்த முதல் வெற்றி

கட்டுரையாளர்:
இலங்கையில் இருந்து
– ஜனகன் –



இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இலங்கை முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவிற்கும் இடையில் 1987ம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட இந்திய இலங்கை உடன்படிக்கையிலுள்ள சரத்தொன்று முதல் தடவையாக 35 வருடங்களின் பின்னர் நிறைவேற்றப்பட்டுள்ளது. இது இந்தியாவிற்கு கிடைத்த முதலாவது வெற்றி" என இலங்கையின் அரசியல் ஆய்வாளர் ஜனகன் விநாயகமூர்த்தி பிபிசி தமிழிடம் தெரிவித்தார்.

இரண்டாவது உலக போரின் போது ஆங்கிலேயர்களினால் பயன்படுத்தப்பட்ட தெற்காசியாவில் மிக கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த 100 எரிபொருள் தாங்கிகள் திருகோணமலை துறைமுகத்தை




அண்மித்து காணப்படுகின்றன. இவ்வாறு காணப்பட்ட எரிபொருள் தாங்கிகளில் ஒன்று இரண்டாவது உலக போரின் போது விமானமொன்று மோதுண்டு சேதமாகியதாக கூறப்படுகின்றது.

இந்த நிலையில் எஞ்சிய 99 எரிபொருள் தாங்கிகள் இலங்கை வசம் காணப்பட்ட நிலையில், அதனை கைப்பற்றுவதற்கு பல நாடுகள் தொடர்ச்சியாக முயற்சிகளை மேற்கொண்டு வந்தன.

தெற்காசியாவிலேயே இயற்கையாக அமைய பெற்ற திருகோணமலை துறைமுகமானது உலகத்திற்கு மிக முக்கியத்தும் வாய்ந்த துறைமுகமாக காணப்படுகின்றது. இந்த நிலையில் குறித்த துறைமுகத்தை கையகப்படுத்த பல நாடுகள் முன்வந்த போதிலும் அதனை கைப்பற்றுவதற்கு முடியாத நிலைமை காணப்பட்டது.

இவ்வாறான பின்னணியில் துறைமுகத்தை அண்மித்து சுமார் 856 ஏக்கர் காணியில் அமைக்கப்பட்டுள்ள 99 எரிப்பொருள் தாங்கிகளில் சிலவற்றை உரிய உடன்படிக்கையின்றி இந்தியா ஏற்கனவே தன்வசம் வைத்திருந்தது.

1987ம் ஆண்டு இந்திய இலங்கை உடன்படிக்கையின் பிரகாரம் இந்த எரிபொருள் தாங்கிகள் இந்தியாவிற்கு வழங்கப்பட வேண்டும் என்ற போதிலும் அவை உரிய உடன்படிக்கைகளின் பிரகாரம் இதுவரை வழங்கப்படவில்லை என அரசியல் ஆய்வாளர் ஜனகன் விநாயகமூர்த்தி தெரிவிக்கின்றார்.

இலங்கையில் 2002ம் ஆண்டு சமாதான உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்ட காலப் பகுதியில் 2003ம் ஆண்டு திருகோணமலை எரிபொருள் தாங்கிகளில் 14 தாங்கிகளை இந்தியன் ஒயில் காப்ரேஷன் நிறுவனம் பயன்படுத்துவதற்கு இணக்கம் எட்டப்பட்டது. இதன்படி உரிய நிபந்தனைகள் அடங்கிய உடன்படிக்கையொன்று இல்லாத நிலையிலேயே இந்த எரிபொருள் தாங்கிகள் பயன்படுத்தப்பட்டதாக அவர் கூறுகின்றார்.

இவ்வாறான நிலையில் 1987ம் ஆண்டு இந்திய இலங்கை உடன்படிக்கையில் ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாடு தற்போது புதுப்பிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிடுகின்றார்.

### திருகோணமலை எரிபொருள் தாங்கி உடன்படிக்கை



திருகோணமலையில் காணப்படுகின்ற 99 எரிபொருள் தாங்கிகள் தொடர்பிலான உடன்படிக்கையொன்றில் இலங்கை பெட்ரோலிய கூட்டுதாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் காப்ரேஷன் ஆகியன கொழும்பில் கடந்த 6ம் தேதி கைச்சாத்திட்டிருந்தன.

இந்த உடன்படிக்கையின் பிரகாரம், 14 எரிபொருள் தாங்கிகள்,லங்கா இந்தியன் ஒயில் காப்ரேஷன் நிறுவனத்திற்கும் 24 எரிபொருள் தாங்கிகள் இலங்கை பெட்ரோலிய கூட்டுதாபனத்திற்கும் முழுமையாக சொந்தமாகின்றன. அத்துடன் எஞ்சிய 61 எரிபொருள் தாங்கிகளும் ரிங்கோ பெரோலியம் டர்மினல் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இலங்கை மற்றும் இந்திய கூட்டு நிறுவனங்களுக்கு சொந்தமாகின்றன. இலங்கை பெட்ரோலிய கூட்டுதாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஆயில் காப்ரேஷன் ஆகிய நிறுவனங்கள் இணைந்தே, ரிங்கோ பெட்ரோலியம் டர்மினல் என்ற பெயரில் நிறுவனமொன்றை ஸ்தாபித்துள்ளன. இந்த நிறுவனத்தின் பணிப்பாளர் சபையில் 4 உறுப்பினர்கள் இலங்கை பெட்ரோலிய கூட்டுதாபனத்தினாலும் 3 உறுப்பினர்கள் லங்கா இந்தியன் ஆயில் காப்ரேஷன் நிறுவனத்தினாலும் நியமிக்கப்படவுள்ளதுடன் அதன் தலைமைத்துவம் எப்போதும் இலங்கை வசமே காணப்படும்.

ரிங்கோ பெட்ரோலியம் டர்மினல் நிறுவனத்தின் ஊடாக 51 சதவீத பங்குகள் இலங்கைக்கும் 49 சதவீத பங்குகள் இந்தியாவிற்கும் உரித்துடையதாகின்றது. இவ்வாறான நிலையில் திருகோணமலை எரிபொருள் தாங்கிகளில் 75 தாங்கிகள் இந்தியாவிற்கும் சொந்தமாகின்றன. இந்த உடன்படிக்கையானது 50 வருட ங்களுக்கு கைச்சாத்திடப்பட்டுள்ளதாக இலங்கை வலுசக்தி அமைச்சு தெரிவிக்கின்றது.

### எரிபொருள் தாங்கி உடன்படிக்கை யாருக்கு வெற்றி

திருகோணமலை எரிபொருள் தாங்கிகளை இலங்கை பெற்றுக் கொண்டமையானது, இலங்கைக்கு கிடைத்த வரலாற்று ரீதியான மாபெரும் வெற்றி என இலங்கை வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவிக்கின்றார்.

1987 மற்றும் 2003ம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகளின் பிரகாரம் இந்தியாவிற்கு வழங்கப்பட்ட திருகோமணலை எரிபொருள் தாங்கி வளாகத்தை, மீண்டும் எமது கட்டுப்பாட்டிற்கு எடுத்துக் கொண்டமையானது வரலாற்று ரீதியான மாபெரும் வெற்றியாகவே நாம் பார்க்கின்றோம். திருகோணமலை எரிபொருள் தாங்கி வளாகத்தில் இலங்கையின் தேசிய கொடியை நான் ஏற்றப் போகின்றேன்" என வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில கடந்த 31ம் தேதி நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

உதய கம்மன்பில கூறுவது போல இது இலங்கைக்கு கிடைத்த வெற்றி கிடையாது என கூறும் அரசியல் ஆய்வாளர் ஜனகன் விநாயகமூர்த்தி மாறாக இது இந்தியாவிற்கு கிடைத்த வெற்றி எனவும் குறிப்பிடுகின்றார்.

இத்தனை காலமும் உடன்படிக்கை இல்லாது காணப்பட்ட இந்தியாவிற்கு தற்போது உடன்படிக்கை கிடைத்துள்ளது. இது உதய கம்மன்பில குறிப்பிடுவது போல இலங்கை வெற்றி பெற்றுவிட்டது என்பது அல்ல. அதிகாரபூர்வமாக 14 தாங்கிகளையும் நீண்ட கால குத்தகை அடிப்படையில் இந்தியாவிற்கு கொடுத்தாகி விட்டது. 61 தாங்கிகளை இணைந்து செயற்படுத்தக்கூடிய ஒரு உடன்படிக்கை செய்துக் கொள்ளப்பட்டுள்ளது. 24 தாங்கிகளை மட்டும் தான் இலங்கை பெட்ரோலிய கூட்டுதாபனம் பயன்படுத்த போகிறார்கள். 1987ம் ஆண்டு உடன்படிக்கையில் இந்தியாவிற்கு உயிர் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த இடத்துல இந்தியா வெற்றி பெற்றுள்ளது என அவர் குறிப்பிடுகின்றார்.

### 1987க்குப் பின் இந்தியா பெற்ற முதலாவது வெற்றி

1987ம் ஆண்டு இந்தியா மற்றும் இலங்கை செய்துக் கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் இந்தியா 35 வருடங்களின் பின்னர் முதலாவது வெற்றியை பெற்றுக் கொண்டுள்ளதாக அரசியல் ஆய்வாளர் ஜனகன் விநாயகமூர்த்தி தெரிவிக்கின்றார்.

987ம் ஆண்டு செய்துக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட 13வது திருத்தம் உள்ளிட்ட அனைத்து விடயங்களும் இதுவரை நிறைவேற்றப் படவில்லை. அது ஒரு உடன்படிக்கை தான், இரண்டு நாடுகளுக்கும் இடையில் போடப்பட்டு அமல்படுத்தப்படாது இருந்த ஒரேயொரு உடன்படிக்கை அதில் ஒரு பகுதியில் இப்பொழுது இந்தியா வெற்றி பெற்றுள்ளது என்றே சொல்ல முடியும். 87ம் ஆண்டு உடன்படிக்கை நடைமுறைப்படுத்தப் படுவதற்கான முதலாவது நகர்வு எடுக்கப்பட்டுள்ளதை இந்த உடன்படிக்கை காட்டியிருக்கு. 87ம் ஆண்டு (20ம் ப்ககம் பார்க்க)

LAW OFFICE of THELMA WILLIAMS

Barrister, Solicitor, Notary Public, Commissioner (ON)
LL.B (Sri Lanka)

- FAMILY LAW:
  - Divorce
  - Separation
  - Property Division
- REAL ESTATE
- WILLS and ESTATES
- EMPLOYMENT LAW
  - ODSP, CPP disability
  - Wrongful Dismissal
  - Long-term Disability
- ADMINISTRATIVE LAW
- POWERS OF ATTORNEY, AFFIDAVITS, STATUTORY DECLARATIONS

- விவாகரத்து, சட்டப்படி பிரிதல், சொத்துக்களை பிரித்தல் போன்ற குடும்ப வழக்குகள்,
- காணி, வீடு வாங்குதல், விற்றல் தொடர்பான சட்டங்கள்
- உயில் மற்றும் எஸ்ரேற்ஸ்
- தொழில்சார் சட்டம்
- நிர்வாக சட்டம்
- சட்ட ஆவணங்களை உருவாக்குதல்

கனேடிய சட்டத்துறையில் பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்ட வல்லுனர்களின் நம்பிக்கையும், உத்தரவாதமுமான சேவை

Quality, Dependable Service with many years of Canadian legal experience.

TEL:647-777-8424
Suite #300, 10 Milner Business Court,
Scarborough, Ontario M1B 3C6
(just 2 minutes north of HWY 401)

PLEASE CALL FOR AN APPOINTMENT

# கோத்தா அரசு கவிழ்வது உறுதி - விமல் எச்சரிக்கை! தேசிய அரசு அமைந்தால் தலைமை தாங்க ரணில் தயாராம்




ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான அரசு தற்போது பயணிக்கும் பாதையில் மாற்றத்தை ஏற்படுத்தாவிட்டால் கவிழ்வது உறுதி. ஆனால், இந்த அரசு வீழ்வது எப்போது என்று இப்போது கூற முடியாது என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பங்காளிக் கட்சியான தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அரசு தற்போது எதிர் நோக்கும் அரசியல் நெருக்கடி தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இராஜாங்க அமைச்சர்களையோ அல்லது அமைச்சர்களையோ பதவி நீக்கம் செய்வதால் அல்லது அமைச்சுக்களின் பொறுப்புக்களை கைமாற்றம் செய்வதால் அரசின் நெருக்கடியைத் தீர்க்க முடியாது.

நாடு பொருளாதார வீழ்ச்சியைச் சந்தித்துள்ள இன்றைய நிலைமையில் மக்களின் மனதை வெல்லும் வகையில் அரசு செயற்பட வேண்டும் என்பதே பங்காளிகளான எமது நோக்கம். இதற்காகவே நாம் உள்ளுக்குள் இருந்து கொண்டு பாடுபடுகின்றோம். வெளியாட்களுடன் சேர்ந்து அரசை வீழ்த்துவது எமது நோக்கமல்ல.

எனினும், அரசு தற்போது பயணிக்கும் பாதையில் மாற்றத்தை ஏற்படுத்தாவிட்டால் கவிழ்வது உறுதி. ஆனால், இந்த அரசு வீழ்வது எப்போது என்று இப்போது கூற முடியாது. அரசின் நகர்வுகளைப் பொறுத்தே அதன் முடிவு தங்கியிருக்கும். ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து ஆழமாக ஆலோசித்து நாட்டுக்கும் மக்களுக்கும் பயனுள்ள சிறந்த தீர்மானங்களை எடுக்க வேண்டும் என்றார்.

இது இவ்வாறிருக்க நல்லெண்ண அடிப்படையில் தேசிய அரசு அமைந்தால் அதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு வழங்கும். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்தார். இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது தற்போதைய சூழ்நிலையில் தேசிய அரசொன்றை அரசு அமைத்தால் அதற்கு எதிரணிகளின் ஒத்துழைப்பையும் பெறலாம். அவ்வாறு அமையும் தேசிய அரசுக்கு தலைமை வழங்குவதற்கு ரணில் தயாராகவே இருக்கின்றார்

பொருளாதாரப் பிரச்சினையால் நாட்டிலுள்ள வளங்களை இந்த அரசு விற்பனை செய்து வருகின்றது. அரசு வசமுள்ள தங்க இருப்பும் குறைவடைந்துள்ளது. பொருளாதாரப் பிரச்சினைக்கான தீர்வுகள் இவை அல்ல. உரிய திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். அதற்கான யோசனைகள் ஐக்கிய தேசியக்கட்சி வசம் உள்ளன என்றார்.

# எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக அர்ஜன ரணதுங்கா




எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அர்ஜுன ரணதுங்கவை பொது வேட்பாளராக களமிறக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2024ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் இடம் பெறவுள்ள நிலையில் ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக சிறந்த ஒருவரை களமிறக்குவதற்கு பல்வேறு மட்டங்களிலும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் அர்ஜுன ரணதுங்கவை பொது வேட்பாளராக களமிறக்க ஐக்கிய தேசிய கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளதாக உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் உத்தியோகபூர்வமான அறிவிப்பினை கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விரைவில் வெளியிடவுள்ளார். அத்தோடு மிக அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியில் அங்கத்துவம் வகிக்கும் அர்ஜுன ரணதுங்க கட்சியிலிருந்து விலகிச் சென்றுள்ள நிலையில் கம்பகா மாவட்டத்தில் அதிக செல்வாக்குள்ள அர்ஜுன ரணதுங்க ஏற்கனவே இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவராக இருந்தமையால் சர்வதேச மட்டத்தில் தொடர்புகளைப் பேணி வரும் நிலையில் அர்ஜுன ரணதுங்கவினை எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக களமிறக்க ஐக்கிய தேசிய கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளதாக உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன தற்போதைய அரசாங்கமானது பல வாக்குறுதிகளை தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் நிறைவேற்றுவதாக கூறியும் தற்போதைய நிலையில் அத்தியாவசியப் பொருட்கள் விலையேற்றம் மற்றும் எரிவாயு தட்டுப்பாடு மற்றும் மேலும் பல விடயங்கள் தொடர்பில் பொதுமக்கள் தற்போதைய அரசின் மீது அதிருப்தியில் உள்ள நிலையிலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


தற்பொழுது Markham நகரிலும்
(Near 14th Ave & McCowan Rd)

Math & Physics Tutoring
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions, Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
Locations: Brampton (Near Bovaird Rd & Brisdale Dr)
Markham (Near 14th Ave & McCowan Rd)
Tel: 416-524-0424

# 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துக! இந்தியப் பிரதமருக்கான ஆவணத்தில் தமிழ்த்தேசியக்கட்சிகள் பிரதான கோரிக்கை!



தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் கையொப்பமிட்டு இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பி வைக்கவுள்ள ஆவணத்தில் பிரதான கோரிக்கையாக அரசியலமைப்பில் உள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு கூறப்பட்டுள்ளது. அத்துடன் 1987 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையின் ஆட்சிப் பொறுப்பில் மாறிமாறியிருந்த அரசாங்கங்கள் வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தையும் முழுமையாக நடைமுறைப்படுத்துமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் மோடிக்கு அனுப்புவதற்காக தயாரிக்கப்பட்ட ஆவணத்தில் முஸ்லிம் மலையக் கட்சிகள் தமது மக்களின் அபிலாஷைகளை முழுமையாக உள்ளீர்க்க முடியாமையின் காரணமாக ஏற்பட்ட கரிசனைகளால் கையொப்பமிடுவதிலிருந்து பின்வாங்கியிருந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை வடக்கு கிழக்கினை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் கையொப்பமிட்டிருந்தனர்.

டிசம்பர் 29ஆம் திகதியிடப்பட்ட இந்த ஆவணத்தின் தலைப்பு தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்வதும் இலங்கை இந்திய ஒப்பந்தமும் என்று காணப்படுகின்றது.

1948 ஆம் ஆண்டு பிரித்தானியரிடம் இருந்து இலங்கை சுதந்திரம் பெற்றதில் இருந்து தமிழ் பேசும் மக்கள் தொடர்ச்சியாக ஆட்சிக்கு வந்த அனைத்து அரசாங்கங்களிடமிருந்தும் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வைக் கோரி வருகின்றனர். தமிழ் பேசும் மக்களின் அரசியல் தலைமையானது சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கைகளின்படி அவர்களின் நியாயமான அபிலாஷைகளை அங்கீகரித்த ஒரு தீர்வைக் கோரியது.

தமிழ் பேசும் மக்களின் தேசியப் பிரச்சினைக்கு உள்நாட்டிலும் சர்வதேச த்தின் உதவியோடும் தீர்வு காண பல முயற்சிகள் மேற் கொள்ளப்பட்ட போதிலும் இன்று வரை தமிழ் பேசும் மக்களின் தேசியப் பிரச்சினை தீர்க்கப்படாமல் உள்ளது என்ற விடயம் குறித்த ஆவணத்தின் முதற் பக்கத்தில் உள்ள முதலாவது பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அடுத்து கடந்த 40 ஆண்டுகளாக இந்திய அரசு தமிழர்களுக்கான தீர்வு முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதுடன் தமிழ் பேசும் மக்கள் தமக்கான கௌரவம், சுயமரியாதை பாதுகாப்பு, அமைதி ஆகயவற்றுடன் வாழ வேண்டும் என்பதற்காக தமிழ் மக்களின் அபிலாஷைகளை திருப்திப்படுத்தும் ஒரு நியாயமான நீடித்து நிலைத்திருக்கக் கூடிய தீர்வைக் காண்பதில் இந்தியா வெளிப்படுத்திய உறுதியான உறுதிப்பாட்டிற்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி பிரேமதாஸ காலத்தில் 1993இல் அமைக்கப்பட்ட மங்கள முனசிங்க ஆணைக்குழு ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் காலத்தில் 2000ஆம் ஆண்டு ஒற்றையாட்சி கட்டமைப்பை மாற்றி அதிகாரங்களை பகிரும் வகையில் கொண்டு வரப்பட்ட அரசியலமைப்பு திருத்ததம், 2002இல் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தலைமையில் ஒஸ்லோவில் முன்னெடுக்கப்பட்ட பேச்சுவார்த்தை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் 2006இல் அமைக்கப்பட்ட சர்வ கட்சி மாநாட்டின் முன்மொழிவுகள், ஜனாதிபதி ராஜபக்ஷ,அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், நோர்வே, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளுக்கும் அவற்றின் முக்கிய பிரதிநிதிகளுக்கும் வழங்கிய முக்கிய உறுதி மொழிகள் பின்னர் 2009இல் போர் நிறைவுக்கு வந்தவுடன் ஐ.நா.பொதுச்செயலாளர் பான் கீ முனுடன் இணைந்து வெளியிட்ட கூட்டு அறிவிப்பு, பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் இந்தியாவுக்கு விஜயம் செய்தபோது வழங்கிய வாக்குறுதி, பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு வழங்கிய வாக்குறுதி தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பிரதமர் நரேந்திரமோடிக்கு வழங்கிய உறுதிமொழி ஆகிய விடயங்கள் உரிய சுட்டிக் காட்டல்களுடன் குறிப்பிடப்பட்டுள்ளன.

அதனைத் தொடர்ந்து அரசியலமைப்பில் உள்ளவாறு 13ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக அமுலாக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளதோடு அத்துடன் நிறுத்தி விடாது அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை காண்பதை நோக்கி கட்டியெழுப்பப்பட வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. ஒற்றையாட்சி அரசியலமைப்பின் கீழ் முழுமையான அதிகாரப் பகிர்வினை தமிழ் மக்கள் எதிர்பார்க்கவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளதோடு இலங்கை இந்திய ஒப்பந்தம் ஒரு சர்வதேச ஒப்பந்தமாக காணப்படுவதோடு அதில் இந்தியாவுக்கு இலங்கை வாக்குறுதிகளை அளித்துள்ளது என்பதும் கூறப்பட்டுள்ளது.

மேலும் வடக்கு மற்றும் கிழக்கின் குடிப்பரம்பலை அடியோடு மாற்றும் நோக்கில், தமிழ் பேசும் மக்களின் காணிகள் தொடர்ந்தும் பல்வேறு காரணங்களின் கீழ் அரசால் அபகரிக்கப்பட்டு வருகின்றன. இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும், இல்லையெனில் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படைகள் இல்லாது போய் விடும் என்பதும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. பின்னர் நிரலிடப்படும் விடயங்கள் தொடர்பில் பிரதமர் நரேந்திர மோடி அதிகூடிய கரிசனைகளை வெளிப்படுத்த வேண்டும் என்று கூறப் பட்டு முதலாவதாக அரசியலமைப்பில் உள்ளவாறாக 13ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக நடை முறைப்படுத்த வேண்டும் என்றும் இரண்டாவதாக 1987ஆம் ஆண்டிலிருந்து அரசாங்கங்களின் அனைத்துப் பிரிவுகளும் வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

இவற்றை அடுத்து இறுதிப் பந்தியில், தமிழ் பேசும் மக்கள் ஒன்றுபட்ட, பிரிக்கப்படாத நாடு என்ற கட்டமைப்பிற்குள் சுயநிர்ணய உரிமைகளுமன் அவர்களின் வரலாற்று வாழ்விடங்களில் சுய மரியாதையுடனும் கௌரவத்துடனும் அமைதியுடனும் பாதுகாப்புடனும் வாழ வழிவகை செய்ய வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

இதனை விடவும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஆவணத்துடன் இலங்கையில் உள்ள தமிழ் பேசும் மக்களுடைய அவசரமாக கரிசனைகள் கொள்ள வேண்டிய விடயங்கள் என்ற தலைப் பில் ஏழு விடயங்கள் சுட்டிக் காட்ட ப்பட்டுள்ளன.

13ஆவது திருத்தம் மற்றும் மாகாண சபைகளுக்கான தேர்தல் 16ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் மொழி உரிமைகள், நிலஅபகரிப்பும் குடிப்பரம்பல் மாற்றமும் மற்றும் எல்லை மீள்நிர்ணயமும், சமத்துவமும் பிராஜாவுரிமையும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ், முஸ்லிம் கைதிகள் தேர்தல் முறை மாற்றம், ஒரேநாடு ஒரேசட்டம் என்ற கோட்பாடு என்பன அவை யாகும்.

## மலையக -முஸ்லிம் கட்சிகளின் ஆதரவுக்கு ரெலோ நன்றி தெரிவிப்பு!

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்புவதற்காக ஆவணத்தயாரிப்பு உட்பட அனைத்துச் செயற்பாடுகளுக்கும் பேராதரவு வழங்கிய மலையக மற்றும் முஸ்லிம் கட்சிகளுக்கு நன்றிகளைத் தெரிவிப்பதாக ரெலோ அறிவித்துள்ளது. அக்கட்சியின் ஊடகப்பேச்சாளர் குருசுவாமி சுரேந்திரன் விடுத்துள்ள ஊடாக அறிவிப்பில் தமிழ் பேசும் மக்களின் கட்சிகள் ஒன்று சேர்ந்து இந்திய பிரதமருக்கு அரசியலமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்தக் கோருவதன் மூலம் மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை பகிர்ந்து மக்கள் முகம் கொடுத்திருக்கும் தற்போதைய பிரச்சினைகளில் இருந்து மீட்கும் முயற்சியை மேற்கொண்டிருந்தோம்.

வடக்கு கிழக்கை மையப்படுத்திய கட்சிகள் ஒருமித்த நிலைப்பாட்டில் அந்த முயற்சியை முன்னெடுத்திருந்த பொழுது மலையக மற்றும் முஸ்லிம் கட்சிகளின் ஆதரவையும் பலத்தையும் கோரி நின்றோம். எவ்வித தயக்கமும் இல்லாது எமது முயற்சிக்கு நலமும் பலமும் சேர்க்கும் வகையில் நம்மோடு தோளோடு தோள் நின்று பயணிக்க முன் வந்தமைக்கு நன்றி கூறுகிறோம். இதனால் எமக்கு உத்வேகம் தந்துள்ளீர்கள்.

அனைத்து தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளையும் பிரதிபலிக்கும் வகையான வரைபை தயாரிக்க முற்பட்ட போதும் எமது அடிப்படை கோரிக்கைகளான தாயகம், சுயநிர்ணய உரிமை, சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு என்பவற்றில் நம்மால் விட்டுக் கொடுக்க முடியாத சூ ழ்நிலையை நீங்கள் புரிந்து கொண்டீர்கள். அதேநேரம் அதில் உங்களால் கையொப்பமிட முடியாத இக்கட்டான நிலையையும் (20ம் பக்கம் பார்க்க)

# 10வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஜனவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

9 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் – உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை – நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் – மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக – எங்கள் வாழ்வு க்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை – மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

08 ஜனவரி 2022 முதல் 14 ஜனவரி 2022 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு செப்டம்பர் முதல் 10வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 31ம் நாள் நினைவஞ்சலி



### பேராசிரியர் கனகசபாபதி நாகேஸ்வரன்

நயினாதீவு 1ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த சப்பிரகமுவ பல்கலைக்கழகப் தமிழ்ப்பேராசிரியர் கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களது 31ம் நாள் நினைவு தினம் 13 ஜனவரி 2022 வியாழக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதிபு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்புப் உணவு வழங்கினார்கள். பேராசிரியர் கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் எல்லாம் வல்ல ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 24வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி நாகநாதர் கனகம்மா

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டைச் சேர்ந்த திருமதி நாகநாதர் கனகம்மா அவர்களது 24வது ஆன்டு நினைவு நாள் 12 ஜனவரி 2022 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி நாகநாதன் கனகம்மா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 7வது ஆண்டு நினைவஞ்சலி



### செல்வி அபிநயா சண்முகநாதன்

கனடா வாட்டர்லூ பல்கலைக்கழக மாணவி செல்வி அபிநயா சண்முகநாதன் அவர்களது ஏழாவது ஆண்டு நினைவு நாள் 18 ஜனவரி 2022 செவ்வாய்க் கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது பெற்றோரகளும் சகோதரங்களும் உறவுகளும் இணைந்து அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். செல்வி அபிநயா சண்முகநாதன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தங்கம்மா சதாசிவம்

புங்குடுதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தங்கம்மா சதாசிவம் அவர்களது மூன்றாவது ஆண்டு நாள் நினைவு நாள் 13 ஜனவரி 2022 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தங்கம்மா சதாசிவம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 6வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி ஶ்ரீபதி ஞானாம்பிகை

மாதகலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி ஞானாம்பிகை ஶ்ரீபதி அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாள் 18 ஜனவரி 2022 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய நாள் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்குகின்றார்கள். திருமதி ஞானாம்பிகை ஶ்ரீபதி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைஞ்சலி



### திருமதி வசந்தா தவரத்தினம்

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் பிரம்டன் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி வசந்தா தவரத்தினம் அவர்களது முதலாவது ஆண்டு நாள் நினைவு நாள் 13 ஜனவரி 2022 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி வசந்தா தவரத்தினம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

**மின்னஞ்சல் முகவரி:- Eelanadu.ca**

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



10 ஜனவரி 2022 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி பாலச்சந்திரன் சுலோசனாதேவி அவர்களது 60வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி பாலச்சந்திரன் சுலோசனாதேவி அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



10 ஜனவரி 2022 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு சுமணன் ஜெயபாலசிங்கம் அவர்களது உடல்நலம் வேண்டிய பிரார்த்தனைக்காக அவரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



10 ஜனவரி 2022 திங்கட்கிழமை மிசிசாகா கனடாவில் வசிக்கும் திரு திருமதி இளங்கோ சிரோன்மணி, செல்வி சுகன்ஜா ஆகியோர் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



11 ஜனவரி 2022 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி பவித்தன் தனு தம்பதிகளின் செல்வப்புதல்வன் ஆதவ் பவித்தனின் முதலாவது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் ஆதவ் தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்புஉணவு வழங்கி மகிழந்தார்.



12 ஜனவரி 2022 புதன்கிழமை யாழ்.கல்வியங்காட்டைச் சேர்ந்த திருமதி நாகநாதர் கனகம்மா அவர்களது 24வது ஆண்டு நினைவுநாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



13 ஜனவரி 2022 வியாழக்கிழமை சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் பிரம்டன் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி வசந்தா தவரத்தினம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவுநாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



13 ஜனவரி 2022 வியாழக்கிழமை நயினாதீவு 1ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த சப்பிரகமுவ பல்கலைக்கழக தமிழ்ப் பேராசிரியர் கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களது 31ம் நாள் நினைவுநாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



13 ஜனவரி 2022 வியாழக்கிழமை புங்குடுதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தங்கம்மா சதாசிவம் அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவுநாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



14 ஜனவரி 2022 வெள்ளிக்கிழமை தைப்பொங்கல் திருநாளுக்காக கனடாவில் வசிக்கும் திரு திருமதி கந்தசாமி புவனேஸ்வரி குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவும் இனிப்பு வகைகளும் வழங்கி மகிழ்ந்தார்கள்.




14 ஜனவரி 2022 வெள்ளிக்கிழமை தைப்பொங்கல் திருநாளுக்காக கனடாவில் வசிக்கும் செல்வி வைஷ்ணவி திருச்செல்வன் அவர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



14 ஜனவரி 2022 வெள்ளிக்கிழமை தைப்பொங்கல் திருநாளுக்காக கனடாவில் வசிக்கும் திரு கதிரேசர் இராசையா குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வன் ஆதவ் பவித்தன்

11 ஜனவரி 2022 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி பவித்தன் தனு தம்பதிகளின் செல்வப்புதல்வன் ஆதவ் பவித்தனின் முதலாவது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் தனது இல்லத்தில் வெகு விமரிசையாக பிறந்த நன்நாளைக் கொண்டாடும் செல்வன் ஆதவ் தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார். அகவை ஒன்று காணும் செல்வன் ஆதவ் பல்கலையும் கற்றுப் பார்போற்றும் பைந்தமிழ் மகனாக வாழ்கவென வாழ்த்தும் அவரது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடன்!

## 60வது பிறந்தநாள் வாழ்த்து



### திருமதி பாலச்சந்திரன் சுலோசனாதேவி

10 ஜனவரி 2022 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி பாலச்சந்திரன் சுலோசனாதேவி அவர்களது 60வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் தனது இல்லத்தில் வெகு எளிமையாக குடும்பத்தினருடன் இணைந்து பிறந்த நன்நாளைக் கொண்டாடிய திருமதி பாலச்சந்திரன் சுலோசனாதேவி அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார். அகவை 60 காணும் திருமதி பாலச்சந்திரன் சுலோசனாதேவி அவர்கள் நோய்நொடியின்றி பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்தும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடன்!

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances


**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases





# Amma Pawn Broker
அம்மா தங்கநகை அடைவு மாடம்



கனேடிய அரச அங்கீகாரம் பெற்ற தங்க நகை அடைவு மாடம்

Covide - 19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு
அம்மா நகை அடைவு மாடம் நட்பு ரீதியாக வழங்கும்

1.0% முதல் 1.5% வரை

அதிரடி சிறப்பு வட்டி வீதம்

உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் கனடாவில்
இதுவரை கண்டிராத குறைந்த வட்டி வீதமும்
உங்கள் முதலை பகுதி பகுதியாக கட்டிக் குறைக்கலாம்



- நீங்கள் அடைவு வைக்கும் காலத்தில் இலவச காப்புறுதி
- உங்கள் பழைய நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
- உங்கள் நகைகள் திருத்த வேலை செய்து தரப்படும்
- வர்த்தகத் துறையில் 27 ஆண்டு நிறைவுடன் நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன் 5 நிமிடங்களிள் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும்
- எம்மிடம் பழைய நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்



அம்மாவுக்கு நிகர் அம்மா நகை மாடமே!

105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8
ammapawnbroker@gmail.com
416-757-0034
416-994-3861







# கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 MIDDLEFIELD ROAD, SCARBOROUGH, ON, M1V 5B8 TEL: 416-321-6104 | www.ayyappan.ca

## மண்டல மகர விரத விஞ்ஞாபனமும் ஐயப்பன் மாலை அணியும் வைபவமும்

### காலம் 16-11-2021 செவ்வாய்க்கிழமை முதல் 21-01-2022 வெள்ளிக்கிழமை வரை

ஐயப்பன் மெய்யடியார்களே!

கலியுகத்தில் தர்மம் குன்றி அதர்மம் மேலிட்டு துன்ப சாகரத்தில் உழலும் வேளையில் தன்னை நாடி வந்த பக்தர்களை கைவிடாத தெய்வம், பட்ட பந்தம் அணிந்து சின்முத்திரைகாட்டி நிராயுதபாணியாய் காட்சி தந்து நெஞ்சுருகி, நெஞ்சுருக வைத்து எம்மை அயராது ரட்சிக்கும் பகவான் ஐயப்பன். ஸ்காபரோ - 635 மிடில்பீல் றோட்டில் அமைந்துள்ள கனடா ஸ்ரீஐயப்பன் இந்து ஆலயத்தில் மண்டல மகர விரத மாலை அணியும் வைபவம் 16.11.2021 செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.00 மணிக்கு கணபதி ஹோமம், தொடர்ந்து சாஸ்தா ஹோமம். அதிகாலை 5.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை புனித துளசிமாலை அணியும் வைபவம் இடம் பெறும். கோவிற்19 அரசாங்க சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக மாலை அணியும் வைபவம் இடம் பெறும். மாலை அணிந்து விரதமிருக்க விரும்பும் அடியார்கள் தங்கள் பெயர்களை முன்கூட்டியே ஆலய காரியாலயத்தில் கட்டாயம் பதிவு செய்து கொள்ளவும். அடியார்கள் யாவரும் ஆலயத்திற்கு வருகை தரும் போது கோவிற்19 அரசாங்க சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக நடந்து கொள்ள வேண்டும் என்றும், ஆலயத்தின் புனிதத்தன்மையைப் பேணுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

### தினமும் இரவு 9.15மணிக்கு ஹரிவராஸன பூசை இடம் பெறும்.

**குருமாற்றம் மஹாயாகம்** - 13-11-2021 சனிக்கிழமை காலை 9.00 மணிமுதல் காலை 11.00 மணிவரை பூசைகள் நடைபெறும்.

**வனதேவதை, பூஜை** - 15-11-2021 திங்கட்கிழமை மாலை 6.00 மணி

**விசேட ஹோமம் - மாலை அணிதல்** - 16-11-2021 செவ்வாய்க்கிழமை -அதிகாலை 4.00 மணிக்கு கணபதி ஹோமம், தொடர்ந்து சாஸ்தா ஹோமம். துளசி மாலை அணியும் வைபவம் அதிகாலை 5.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை இடம் பெறும்

**சுவாமிமார்களின் விளக்குப்பூசை**
26-11-2021 வெள்ளிக்கிழமை, 27.11.2021 சனிக்கிழமை ஆகிய இருதினங்களும் மாலை 5.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை இடம் பெறும்.

**ஆஞ்சநேய யாகம்** - 29-11-2021 திங்கட்கிழமை காலை 9.00 முதல் மதியம் 12.00 மணி வரை நடைபெறும்.

**சுவாமிமார்களின் இலட்சார்ச்சனை**
03.12.2021 வெள்ளிக்கிழமை, 04.122.2021 சனிக்கிழமை ஆகிய இரு தினங்களும் காலை 10.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையும், மாலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணி வரையும் இடம் பெறும்.

**1008 கலச சங்காபிசேகம்** - 12-12-2021 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு இடம் பெறும்.

**பால்குட அபிஷேகம்** 19-12-2021 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் 11.00 மணிவரையும், மாலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணிவரையும் இடம் பெறும்.

**புலிப்பால் வேட்டை** - 19-12-2021 ஞாயிற்றுக்கிழமை மதியம்

**நாகராஜ உற்சவம் - சர்ப சாந்தி** - 19-12-2021 ஞாயிற்றுக்கிழமை
காலை 9.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையும் இடம் பெறும்.

**நெய் நிரப்புதல், இருமுடி கட்டுதல்**
25-12-2021 சனிக்கிழமை, 26-12-2021 ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் அதிகாலை 4:00 மணிமுதல் மாலை 5:00 மணி வரை இடம் பெறும்.


**நெய் அபிஷேகம்**
27-12-2021 திங்கட்கிழமை, 28.12.2021 செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.00 மணி முதல் மதியம் 1.00 மணிவரை நடைபெறும்.

**ஆஞ்சநேயர் ஜெயந்தி**
01.01.2022 - 02.01.2022 (சனி - ஞாயிறு) ஆகிய இரு தினங்களும் காலை 9.00 மணி முதல் 11.00 மணி வரை யாகம், அபிஷேகம், பூஜை நடைபெறும்.

**மஞ்சமாதா திருவிழா, புஷ்பாபிசேகம்**
01-01-2022 சனிக்கிழமை முதல் 14-01-2022 வெள்ளிக்கிழமை வரை.

**மகர சங்கிராந்தி, திருவாபரணம், மகரஜோதி தரிசனம், பூச்சொரிதல், தைப்பொங்கல்**
14-01-2022 வெள்ளிக்கிழமை

**வைரவர் மடை, வனபூஜை, குருதிபூஜை, வேண்டுதல் நிறைவேற்று உற்சவம்**
21-01-2022 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்கு இடம் பெறும்.



### பக்தர்களுக்கு முக்கிய அறிவித்தல்கள்

1. கோவிற்19 அரசாங்க சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக நடக்க வேண்டும்.
2. மாலை அணிதல் 16.11.2021 செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.00 மணிக்கு ஆரம்பமாகும்.
3. கோவிற்19 சுகாதார விதிகளுக்கு அமைவாக மாலை அணிதல் இடம் பெறும்.
4. கைத்தொலைபேசியை ஆலயத்தினுள் பாவிக்க வேண்டாம்.
5. இவ்வருடம் சபரிமலை யாத்திரை மேற்கொள்ளுவதில்லை.
6. ஆலயத்தினுள் புகைப்படம், வீடியோ எடுப்பது தடை செய்யப்பட்டுள்ளது என்பதனையும் அனைவருக்கும் பணிவுடன் அறியத்தருகின்றோம்.

- இறை சேவையிலுள்ள ஆலய அறங்காவலர் சபை

# கோவிட்-19 பூஸ்டர் தடுப்பூசியை எடுத்துக்கொள்ளுங்கள்.

இன்றே உங்கள் பூஸ்டர் தடுப்பூசியை முன்பதிவு செய்யுங்கள்.

கோவிட்-19 -இலிருந்து உங்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

நமது பாதுகாப்பு நம் அனைவரின் கையில்.



ontario.ca/covid19 -ஐ சென்று பாருங்கள்

ஒன்றாறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது.

Ontario


# 7வது ஆண்டு ஆறாத்துயரின் நினைவுகளோடு (18.01.2022)



## செல்வி அபிநயா சண்முகநாதன்

### (கனடா வாட்டர்லூ பல்கலைக்கழக மாணவி)

மறந்தால் தானே நினைப்பதற்கு! அன்புப் பிள்ளையின் நினைவுகளால் நடமாடுகிறோம்! அழகு பிள்ளையின் சிந்தனையால் நாட்கள் நகர்கின்றன!

அறிவார்ந்த பிள்ளையின் அறிவு திறத்தை மெச்சிக் கொண்டிருந்த பொழுது உச்சி மீது வானிடிந்து விழுந்த நாள் வருவதை எண்ணினாலே மீண்டும் உடல் தளர்த்து நடுங்கி உலர்ந்து விடுகின்றது

வாழ்வாங்கு வாழ்வதற்கு இறைவனின் வரம் கிடைத்தது என்று எண்ணியிருந்த வேளையிலே யார் விட்ட சாபமோ? தேர் போல இருந்த நாம் சாய்ந்து தத்தளித்துக் கொண்டிருக்கின்றோம். கண்ணுக்குத் தெரியாத துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்

அன்புத் தங்கை இன்று இருந்திருந்தால் வருத்தங்கள் எல்லாம் திருத்தங்கள் ஆக மாறி இருக்கும். கவலைகள் எல்லாம் கலைகளாக மாறி இருக்கும்.

கண்ணீரெல்லாம் பன்னீராக மணக்கும். வரண்டு போன நெஞ்சுகுளி செழுமையான மகிழ்வை தாங்கி இருக்கும் தினம் தினம் பார்த்து பார்த்து வளர்த்து இருப்போம் என்றும் அண்ணன்களின் மனக்குமுறல்கள் நாள்தோறும் நாடித் துடிப்பாக வளர்கின்றன

எங்களின் பிள்ளை முன்னேறி வளர்ந்து கொண்டிருக்கிறாள் என்று சிந்தித்து வாழ்ந்து கொண்டிருந்த பொழுது நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும் என்பது போல இது உங்களின் பிள்ளை அல்ல எங்களின் பிள்ளை என்று இறைவன் எடுத்துக் கொண்டான்

உலகையும் உயிர்களையும் படைத்த இறைவனிடத்தில் வழிபாட்டால் மன்றாடி போராடுகின்றோம். அன்பு பிள்ளையைத் தந்த இறைவா ஏன் எங்கள் பிள்ளையை எடுத்துக் கொண்டாய்? கொடுத்த பிள்ளையை கடைசி காலம் வரை வாழவைத்து வாழ்வின் நோக்கத்தை நிறைவேற்றிய பிறகு நீ எடுத்துக் கொண்டிருக்கலாம்

ஆதியில் தந்த அன்பு குழந்தையை பாதியில் எடுத்துக் கொண்டு அநீதி இழைப்பது எவ்விதத்தில் நியாயமாகும் இறைவா? மனம் இருந்தால் மார்க்கம் உண்டு உனக்கு மனம் எங்கே இருக்கின்றது? உனக்கான மார்க்கம் தான் என்ன?

உலகம் புரியாத புதிராய் புலம்பி அழவைத்தாயே அம்மா. எனக்கு உற்ற மனைவியும் என்னை பெற்ற தாயும் இரண்டு கண்களாக எண்ணி வாழ்க்கைப் பயணத்தை தொடங்கிய போது எந்தன் நெற்றிக்கண்ணாக பிறந்த என் அன்புச் செல்வமே

எங்களை விட்டு நீ இறைவனிடத்தில் சென்றது குற்றம் குற்றமே. ஆறாத கண்ணீர்க் கடலில் கரைகின்றோம். உன்னைத் தந்து எடுத்த இறைவனின் இறை பிள்ளையாக உன்னை வணங்குகிறோம்.

எங்களின் வாழ்வில் தாயும் சேயும் நீயே மகளே விதியின் பயணத்தால் உன்னை வந்து சேரும் வரை வீட்டின் நலனை காப்பாயே அம்மா நாட்டின் நலனுக்கு புகழ் சேர்ப்பாயே மகளே!

தமிழகம் நாமக்கல் நாவுக்கரசர் - பேராசிரியர் பொன். கதிரேசன்

கண்துஞ்சா நீங்கா நினைவுகளுடன்

பெற்றோர், அம்மம்மா, அண்ணாக்கள்,

சண் ஆசிரியர் (Shan Master Brampton - Canada)

# வைரஸ் மட்டும் தான் தோல்விகளுக்கு காரணமா?

மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்த அரசுத் தலைவரும் அரசும் இப்பொழுது ஆட்சிக்கு உள்ளேயும் வெளியேயும் எதிர்ப்புகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆட்சிக்குள்ளேயே பங்காளிக் கட்சிகள் அரசைக் கடுமையாக விமர்சித்து வருகின்றன. அவ்வாறு அரசை விமர்சித்த சுசில் பிரேம் ஜயந்த அண்மையில் ராஜாங்க அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

அவரைப் பதவி நீக்கியமை ஒரு குறியீட்டு நடவடிக்கை என்று தென்னிலங்கையில் வர்ணிக்கப்படுகிறது. அவர் மஹிந்தவுக்கு நெருக்கமானவர். அவரைப் போலவே அரசுக்குள் இருந்து கொண்டு அரசை விமர்சிக்கும் பங்காளிக் கட்சித் தலைவர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார போன்றவர்களும் மகிந்தவிற்கு நெருக்கமானவர்கள். அவர்களை தொடர்ந்தும் தாமரை மொட்டு கட்சிக்குள் வைத்திருப்பது மஹிந்த தான் என்ற ஒரு அபிப்பிராயம் தென்னிலங்கையில் உண்டு. அவர் தான் மேற்படி பங்காளிக் கட்சிகளை அரவணைத்து வைத்திருக்கிறார். அவருடைய சகோதரர்களுக்கு அந்த முகவசியம் இல்லை என்று கூறப்படுகிறது.

இவ்வாறானதொரு பின்னணியில் சுசில் பிரேம் ஜயந்த பதவியிலிருந்து நீக்கப்பட்டமை ஆட்சியில் மஹிந்த ராஜபக்சவின் நிலை மேலும் பலவீனமடைந்து வருவதை காட்டுவதாக ஒரு விளக்கம் தென்னிலங்கையில் கூறப்படுகிறது. இது எதிர்காலத்தில் பசில் ராஜபக்சவை பிரதமர் பதவிக்கு மேலுயர்த்தும் ஒரு நடவடிக்கையில் போய் முடியலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

அதாவது ஆளும் தரப்புக்குள்ளும் ஐக்கியம் பலவீனமாக இருப்பதை காட்டுகிறது. அதேசமயம் அரசாங்கத்துக்கு வெளியே பொதுமக்கள் மத்தியில் அதிருப்தியும் கசப்பும் வெறுப்பும் அதிகரித்து வருகின்றன. நாட்டில் இப்பொழுது அரசாங்கம் என்ற ஒன்று உண்டா என்று தென்னிலங்கையில் மக்கள் கேட்கும் அளவுக்கு நிலைமைகள் வந்து விட்டன. அரசாங்கத்தை எதிர்க் கட்சிகள் கவிழ்க்கத் தேவையில்லை. அரசாங்கம் ஏற்கனவே கவிழ்ந்து விட்டது என்று கூறுகிறார் மனோ கணேசன். மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்த ஓர் அரசாங்கமும் அரசுத் தலைவரும் இவ்வாறு இரண்டு



ஆண்டுகளில் அபகீர்த்திக்குள்ளாவதற்கு காரணம் என்ன? covid — 19 மட்டும்தான் காரணமா? அல்லது அது வல்லாத வேறு காரணங்கள் உண்டா? covid — 19 உலகம் முழுவதற்குமான ஒரு பொதுப் பிரச்சினை. இலங்கை போன்ற பல சிறிய நாடுகளில் அது கடுமையான சேதத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால் அந்த எல்லா நாடுகளிலும் இலங்கையில் இப்பொழுது ஏற்பட்டிருப்பதை போன்ற பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கவில்லை. அப்படி என்றால் covid — 19 மட்டும் தான் இலங்கைத் தீவின் நெருக்கடிகளுக்கு காரணமல்ல என்பது தெளிவாக தெரிகிறது. அது வல்லாத வேறு காரணங்களும் உண்டு என்பதை அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறதா?

அரசுத்தலைவர் கோத்தாபய ராஜபக்ச பதவிக்கு வந்த பொழுது அவருடைய மூளை என்று கருதப்பட்ட வியத்மக அமைப்பு பெரும் எதிர்பார்ப்போடு பார்க்கப்பட்டது. ஓய்வு பெற்ற ராஜதந்திரிகள், படைப் பிரதானிகள், நிர்வாக அதிகாரிகள் போன்றோரை உள்ளடக்கி தொழில்சார் திறன்மிக்க புத்திஜீவிகளால் உருவாக்கப்பட்ட ஒரு சிந்தனைக் குழாமாக அது வர்ணிக்கப்பட்டது. தொழில்சார் திறன்களின் மூலம் நாட்டை கட்டி எழுப்புவதே அதன் வழி வரைபடம் என்றும் காட்டப்பட்டது. கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுவதற்குரிய வழி வரைபடத்தை வியத்மக அமைப்பும் எலிய என்று அழைக்கப்படும் ஒரு சிவில் அமைப்பும் தான் உருவாக்கின என்று கூறப்பட்டது. கோட்டாபயவின் அரசாங்கத்தில் வியத்மக புத்திஜீவிகளும் நிபுணர்களும் பங்காளிகளாக காணப்படுகிறார்கள்.

கடந்த பொதுத் தேர்தலில் வியத்மக அமைப்பைச் சேர்ந்த மொத்தம் ஒன்பது பேர் போட்டியிட்டார்கள் இவர்களில் எட்டுப் பேர் வெற்றிப் பெற்றார்கள். கொழும்பு — சரத் வீரசேகர, கம்பஹா — கலாநிதி நாலக கொடஹேவா, மாத்தளை — நாலக கோட்டேகொட, அனுராதபுரம் — பேராசிரியர் சன்ன ஜயசுமன, குருணாகல் — பேராசிரியர் குணபால ரத்னசேகர, கண்டி —சட்டத்தரணி உதயன கிரிந்திகொட, அம்பாந்தோட்டை — மருத்துவர் உபுல் கலப்பத்தி, திகாமடுல்ல — திலக் ராஜபக்ச ஆகியோர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளனர். கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட வியத்மக அமைப்பை சேர்ந்த அனுர பெர்ணான்டோ தோல்வியடைந்தார். வியத்மக அமைப்பை சேர்ந்த அஜித் நிவாட் கப்ரால், சீதா அரம்பேபொல ஆகியோர் தேசிய பட்டியல் மூலமாக நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டனர்.

வியத்மக அமைப்பானது 2009க்குப் பின்னரான சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதத்தை அறிவியல் மயப்படுத்தும் ஒரு நடவடிக்கையாக பார்க்கப்பட்டது. அதை அரசாங்கத்தின் மூளை என்றும் அழைத்தார்கள். தவிர மனோ கணேசன் அதனை அரசாங்கத்துக்குள் ஒரு அரசாங்கம் என்று வர்ணித்தார். ஆனால் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட வியத்மக அமைப்பின் பொருளாதார திட்டங்களும் ஏனைய திட்டங்களும் எதிர்பார்த்த வெற்றிகளை பெறத் தவறிவிட்டதையே கடந்த இரண்டு ஆண்டுகள் நிரூபித்திருக்கின்றன.

எனவே தொகுத்துப் பார்த்தால் கடந்த இரண்டு ஆண்டுகளில் அரசாங்கம் அடைந்த தோல்விகளுக்கு ஒருவிதத்தில் வியத்மக அமைப்பும் பொறுப்புத் தான். ஒரு சிந்தனை குழாத்தின் பின்பலத்தோடு ஆட்சிக்கு வந்த ஒரு அரசுத்தலைவர் இவ்வாறு வெற்றி பெறத் தவறியமை என்பது அந்த சிந்தனைக் குழாத்தின் தோல்வியும்தான். அப்படியென்றால் அந்த சிந்தனை குழாத்தின் தொழில்சார் திறன், திட்டமிடல் போன்றவற்றிலும் தவறு இருக்கிறது என்று தான் பொருள். வியத்மக அமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான கலாநிதி நாலக கொடகேவ அரசாங்கம் வியத்மக வகுத்த வழியில் செல்ல தவறியதே தோல்விகளுக்கு காரணம் என்று கூறுகிறார்.



கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –


இப்போது ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடிகள் வைரஸ் தாக்கத்தால் மட்டும் ஏற்பட்டவை அல்ல. அதற்கு முன்னரே ஈஸ்டர் குண்டு வெடிப்பினால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டிருந்தது. வைரஸின் தாக்கம் பாதிப்பை மேலும் அதிகப்படுத்தியது என்பதே சரி. ஆயின் ஈஸ்டர் குண்டு வெடிப்புக்கு முன்பு பொருளாதாரம் செழிப்பாக இருந்தது என்று எடுத்துக் கொள்ளலாமா? இல்லை அப்படியில்லை. ரணில் விக்கிரமசிங்கவின் காலத்திலும் நாடு கடனாளியாகத் தான் இருந்தது. அதனால் தான் அம்பாந்தோட்டை துறைமுகத்தை அவர் 99 ஆண்டு கால குத்தகைக்கு சீன நிறுவனம் ஒன்றுக்கு எழுதிக் கொடுத்தார். எனவே நாட்டின் பொருளாதாரம் வைரசுக்கு முன்பு செழிப்பாக இருந்தது என்று எடுத்துக் கொள்ள முடியாது.


குறிப்பாக 2009ஆம் ஆண்டு உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டு வந்த பின்னரும் கூட நாட்டின் பொருளாதாரத்தை நிமிர்த்த முடியவில்லை என்பதே உண்மை. ஏன் முடியவில்லை? ஏனென்றால் இலங்கைத்தீவு தொடர்ந்தும் முதலீட்டு கவர்ச்சி குறைந்த ஒரு நாடாகக் காணப்பட்டது. முதலீட்டாளர்கள் ஏன் நாட்டை நோக்கி வரவில்லை? காரணம் மிகவும் எளிமையானது. நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மை தொடர்பில் முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. அதற்கு என்ன காரணம்? ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னரும் நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை ஏன் ஏற்படவில்லை? ஏனென்றால் இனப்பிரச்சினை தீர்க்கப்படவில்லை. அதுதான் காரணம். அது தான் பிரச்சினை. அதுதான் அடிப்படைக் காரணம். தீர்க்கப்படாத இனப்பிரச்சினையின் தொடர் விளைவுகளை இவை.

யுத்தம் ஒரு காரணம் அல்ல. அது ஒரு விளைவு தான். அது இனப்பிரச்சினையின் விளைவு. இனப்பிரச்சினை எதனால் வந்தது? அது இன ஒடுக்குமுறையால் வந்தது. இன ஒடுக்குமுறை எங்கிருந்து தொடங்கியது? ஒரு பெரிய இனமும் பெரிய மதமும் இச்சிறிய தீவுக்கு உரிமை கோரிய போது உருவாகியது. அதாவது சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதம் பல்லினத் தன்மை மிக்க ஒரு தீவை ஏற்றுக்கொள்ள மறுத்தமை தான் இனப்பிரச்சினைக்கு மூல காரணம்.

அதே சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதம் அதே நிலைப்பாட்டை 2009க்கு பின்னரும் அறிவியல் மயப்படுத்தி தொழிற் திறன்களுடன் முன்னெடுக்க முற்பட்டதன் தோல்வி தான் நாடு இப்பொழுது எதிர் கொள்ளும் எல்லா நெருக்கடிகளுக்கும் காரணம். எனவே வியத்மக மட்டுமல்ல எத்தனை சிந்தனை குழாம்களை உருவாக்கினாலும் அவை நாட்டின் பல்லினத் தன்மையை நோக்கி பல சமயப்பண்பை நோக்கி சிந்திக்கவில்லை என்றால் நாட்டை(20ம் பக்கம் பார்க்க)


## கோழி இறைச்சி – ஆட்டிறைச்சி உங்கள் வீட்டுக்கே விநியோகம்!





உங்கள் குடும்பத்தின் தேவைக்கேற்ற அளவில் உங்கள் வீட்டு வாசல் வரை விநியோகம் செய்கின்றோம். அத்துடன் குடும்பத்தினர் சமைக்கக் கூடிய முறையில் சிறுசிறு துண்டுகளாக துப்பரவாக வெட்டியும் தருகின்றோம்.

வாரத்தில் வெள்ளி – சனி – ஞாயிறு தினங்களில் மட்டுமே சேவை.

ஒரு முறை வாங்கிச் சமைத்துப் பாருங்கள்!

தொடர்புகளுக்கு:- சானு 416 456 3051 ஹரீ 647 328 8880

# 36வது ஆண்டில் முது தமிழர் மன்றம்

ஆண்டொன்று புதிதாய்ப் பிறந்திருக்கிறது. ஆனந்தம் அனைவர் மனங்களையும் ஆட் கொண்டிருக்கிறது. எம் தமிழ்ச் சமூகத்து முதியோர் புதுத் தெம்புடன் தைப்பொங்கல் திருநாளுக்காகக் காத்திருக்கிறார்கள். இவ்வேளையில் 1986 தைப்பொங்கல் நாளன்று முகிழ்த்த ஒன்ராறியோ முதுதமிழர் மன்றம் 36 ஆவது ஆண்டில் கால் பதிக்கும் இத்தருணத்தில்இ எமது மன்றம் முன்னெடுத்து வரும் செயற்றிட்டங்கள் குறித்து உங்களோடு பகிர்ந்து கொள்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

1985களில் கருவாகி 1986 தைப்பொங்கல் தினத்தன்று உருவாகிய ஒன்ராறியோ முது தமிழர் மன்ற அங்கத்தவர்கள் டொன்மில்ஸ் பாடசாலையில் வியாழக்கிழமைகளிலும் செயின்ட் நினியன்ஸ் தேவாலயத்தில் சனிக்கிழமைகளிலும் தங்கள் செயற்பாடுகளை மேற்கொண்டு வந்தார்கள். இந்நிலையில் 1989 வசந்த காலத்திலிருந்து ஓரியோல் சனசமூக வள நிலையம் (Oriole Community Resources Centre) முது தமிழர் மன்றத்தின் அலுவலகத்தை தனது இடத்தில் வாடகை இன்றி நடத்த அனுமதித்தமை மிகப்பெரும் வரப்பிரசாதமாய் அமைந்தது. பதினெட்டு வருடங்களுக்கு மேலாக ஓரியோல் சனசமூக வள நிலையத்தில் இயங்கி வந்த முதுதமிழர் மன்றம் தனது சேவைகளை மேலும் பரந்து பட்ட அளவில் மேற்கொள்வதற்கு வசதியாக 2009 இல் தற்போதைய அலுவலகத்திற்கு (Finch Ave. & Middlefield Road சந்திப்பில் 5200 Finch Avenue East , Unit 203 ) மாறியது.

2020 ஆரம்ப காலம் வரை மன்றம் வாரம் தோறும் நிகழ்த்தி வந்த உடல் உள வள நிகழ்வுகள் மிகவும் பிரசித்தமானவை. 2020 மார்ச் மாதத்தில் கோவிட் — 19 பெரும் தொற்றுப் பேரிடர் ஏற்படுத்திய தாக்கமும் முழு உலக ஒழுங்குமே குழம்பிப் போனமையும் நாம் அனைவரும் அறிந்ததே. சாதாரண சூழ்நிலையிலேயே முதியோரின் நலன்களைப் பேணுவதையே முக்கிய குறிக்கோளாகக் கொண்ட முது தமிழர் மன்றம் தாம் எதிர் நோக்குகின்ற சவால்களோடு ஆற்ற வேண்டிய அவசியமானதும் அவசரமானதுமான பணிகள் குறித்துத் தீவிர கவனம் செலுத்தியது. இதன் பயனாக மெய்நிகர் (zoom ) ஊடாக வாரத்தில் மூன்று நாட்கள் உடல் நலன் பேணும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. அத்தோடுஇ 2020 ஏப்ரில் இலிருந்து மன்ற உத்தியோகத்தர் வசந்தி சாந்தகுமார் அவர்களால் வைகறை எனும் e-magazine வாராந்தம் வெள்ளிக்கிழமை தயாரித்து வழங்கப்படுவதும் பலரது அபரிமிதமான பாராட்டுதலைப் பெற்றுள்ளதும் நாம் அறிந்ததே.

தொடரும் பெரும்தொற்றுப் பேரிடர்க் காலமான 2020 செப்டம்பரில் மன்றத்தின் தலைவராக திருமதி. இந்திரா நடராஜா அவர்களும் சக இயக்குனர் சபை உறுப்பினர்களும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து மன்றத்தின் செயற்பாடுகளில் புதியதோர் உத்வேகம் காணப்படுவதை அனைவரும் ஏற்றுக்கொள்வர். வாரத்தில் ஐந்து நாட்களும் தியானம் மூச்சுப் பயிற்சி Cardio exercise Robotics class மணி மாலை செய்தல் (beading) "நிலாமுற்றம்" பல்சுவை நிகழ்ச்சி Chair yoga வெள்ளி விருந்தினர் சந்திப்பு துறைசார் வல்லுனர்களின் விசேட கலந்துரையாடல்கள் "STC got Talent" போன்ற இன்னோரன்ன நிகழ்வுகள் முது தமிழர் மன்ற அங்கத்தவர்களை மென்மேலும் உற்சாகமடைய வைத்திருக்கின்றன. மேலும் உலக சமாதான தினம் காதலர் தினம் தந்தையர் தினம் அன்னையர் தினம் பாரதி நினைவு தினம் நவராத்திரி மகளிர் தினம் எனப் பல்வேறு சிறப்பு நிகழ்வுகளும் வருடாந்த நிகழ்வுகளாக கனடா தினம் தீபாவளி நத்தார் தினக் கொண்டாட்டங்களும் தரம் மிகு படைப்புக்களோடு இடம் பெற்றமை சுட்டிக் காட்டத்தக்கதொன்று. 2020 ஒக்டோபரில் மன்றம் அதன் வளர்ச்சியில் புதிய பரிமாணத்தை எட்டியதாக குறிப்பிடப்படுகிறது.

தொடர்ந்து வளர்ச்சிப் பாதையிலேயே நடைபோடும் ஒன்ராறியோ முது தமிழர் மன்றம் தனது 35 ஆண்டு நிறைவை தற்போதைய பெரும் தொற்றுக் காரணமாக சிறிய அளவிலான விழாவாக மெய்நிகர் (zoom) வாயிலாக 2021 ஜனவரி 15இல் நிகழ்த்தியது. அன்றைய தினம் மன்றத்துக் காலாண்டுச் செய்தியிதழ் "சங்கநாதம்" எனப் புதிய பெயர் சூட்டி வெளியிட்டு வைக்கப்பட்டது. மேலும் மன்றத்தின் சீரான வளர்ச்சிக்கு இயக்குனர் சபை உறுப்பினர்கள் மன்ற உத்தியோகத்தர்கள் ஆகியோர்க்கு பயிற்சிப் பட்டறைகள் அவசியமென்பதைக் கருத்திற் கொண்டு " Governance - Board Members' Roles and Responsibilities Succession Planning என இரு முகாம்கள் நடத்தப்பட்டன. இப்பெரும் தொற்றுக்காலத்தில் மன்ற செயற்பாடுகளை முன்னெடுக்க நிதி திட்டமிடல் குழு (Financial Planning Committee) நிதி திரட்டல் குழு(Fundraising Committee) கலாச்சாரக்குழு (Culture and Festivals Committee) நட்புடன் கூடிய விசாரிப்பு குழு (Friendly visiting & Tele Assurance Committee) தொழில் நுட்பக் குழு (Technical Support) "இளம் தளிர்கள்" (Youth Wing ) போன்ற உப குழுக்கள் அமைக்கப்பட்டன.

கொரோனா பெருந்தொற்று இரண்டு ஆண்டுகளாகத் தொடரும் நிலையில் மன்றத்தின் உள்ளக கட்டமைப்பை சீரமைக்கும் முயற்சிகளில் இயக்குனர் சபை தீவிர கவனம் செலுத்தியது. முது தமிழர் மன்றத்தின் மூன்று ஆண்டுக்கான "Strategic Planning " மூலோபாய திட்டமிடலின் கீழ் மன்றத்தின் யாப்பு முழுமையாக மீள்வரைவு செய்யப்பட்டது. இப்புதிய வரைபு 2021 ஜூலை இல் விசேட பொதுச் சபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டு 2022 நிதியாண்டு முதல் நடைமுறைக்கு வரவிருக்கிறது. மன்ற முகாமைத்துவக் கையேடு நாளாந்த செயல் வழிகாட்டி போன்றன புதுப்பிக்கப்பட்டுள்ளன. இவ்விடயங்களை நிறைவேற்ற அமைக்கப்பெற்ற தற்காலிக குழுவிற்குத் (ad -hoc committee ) தலைமை தாங்கிய மன்றப் பொருளாளர் திரு.கு. அரசரத்தினம் மற்றும் குழு உறுப்பினர்கள் அனைவரும் வெகுவாகப் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

எம் சமூகம் சார்ந்தியங்கும் ஓர் தாபனம் என்ற வகையில் காலத்துக்குக் காலம் நாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கேற்ப புதிய அணுகுமுறைகளைக் கையாள்வதிலும் ஏற்புடைய புதிய திட்டங்களைச் செயற்படுத்துவதிலும் நாம் என்றும் பின்னிற்பதில்லை. இந்த வகையில் நாம் அண்மையில் முன்னெடுத்த சில திட்டங்களை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதென்று கருதுகிறேன்.

1எமது மூத்தோரை நாமே அரவணைப்போம்" (Embracing our Elders)

எமது வாராந்த உள வள நிகழ்வுகளில் பங்குபற்ற இயலாத கணனி கையாளும் இயலுமையற்ற மூத்தோரது நலனைக் கருத்திற் கொண்டு இத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் ஊடாக

(a) கொரோனா பெருந்தொற்று வீச்சம் பெற்றிருந்த காலத்தில் ஏழு வாரங்கள் தொடர்ச்சியாக ஏனைய பொது நலத் தாபனங்களின் உதவியுடன் உலர் உணவுப் பொதிகள் சூடான மதிய உணவுப்பொதிகள் முகக்கவசங்கள் ஆகியன ரொறொண்ரோவிலுள்ள முதியோருக்கான தொடர் மாடிக் கட்டடங்களில் வசிப்போருக்கு வழங்கப்பட்டன.

(b) கணனி வசதியற்றஇ தனிமையில் வாடும் மூத்தோருக்கு வைகறை வாராந்த இதழ் (25 வார அச்சுப்பிரதிகளின் தொகுப்பு) அவரவர் இருப்பிடங்களுக்கே கொண்டுசென்று இலவசமாகத் தரப்படுகிறது.




© நீண்ட கால முதியோர் பராமரிப்பு நிலையமான "Extendicare " இலுள்ள தமிழ் உறவுகளுக்கு தீபாவளிப் பண்டிகைக் காலத்தையொட்டி பரிசுப் பொருட்கள் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன.

(d) 250க்கும் மேற்பட்ட முகக்கவசங்கள் கம்பளித் தொப்பிகள் சால்வைகள் ஸ்காபரோ சமூக சேவைகள் நிலையத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

(e) அதி மூத்த ( 90 +) மற்றும் விசேட பிறந்தநாள் (milestone birth day) காணும் அனைத்து அங்கத்தவர்களுக்கும் பரிசுப்பொதி (hamper) அவரவர் இருப்பிடங்களுக்கு கொண்டு சென்று வழங்கப்பட்டன. தனிமையில் வாழும் அங்கத்தினரை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு நலன் விசாரிப்பதும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

2 ஒன்றிணைவோம் நேயமுடன் ( Together in Friendship)

தனிமையில் வாழும் ஒருவர் தன் மனதை அழுத்துகின்ற பல விடயங்களை தனது குடும்ப உறவுகளோடு மனம்விட்டுப் பகிர்ந்து கொள்ள முடியாமல் அல்லது விரும்பாமல் தன்னுடனேயே தேக்கிக் கொள்வதனால் ஏற்படும் மனஉளைச்சல்களை தன்னொத்த நிலைமையில் வாழும் இன்னொரு நட்புடன் மனம் விட்டு பேசுவதன் மூலம் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளலாம் தானும் மாறலாம் மற்றையோருள்ளும் மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்ற சிந்தனையின் அடிப்படையில் தோன்றியதே இத்திட்டம். ஆயினும் இத் திட்டம் பல படிநிலைகளைத் தாண்டி குடும்ப வைத்தியர்கள் மன நல ஆலோசகர்கள் ஆகியோரது வழிகாட்டலில் "ஆலோசகர்களுக்கான பயிற்சிப் பட்டறைகள்" நடத்தி முடிக்கும் அளவிற்கு வளர்ந்திருக்கிறது. இதில் கலந்து கொண்டு பலனடைந்தோர் கூறும் கருத்துக்களும் எமது பணி பயன் விளைவிக்கிறதென்ற மனநிறைவும் எம்மை மேலும் முன்னோக்கி நகர்த்திச் செல்கின்றன.

3. இளம் தளிர்கள் (Juniors ' Wing )

ஒன்ராறியோ முது தமிழர் மன்றம் தனியே முதியோர் நலனில் மாத்திரம் அக்கறை காட்டும் ஓர் அமைப்பு அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் கடந்த காலங்களில் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டதை யாவரும் அறிவர். நியூ ஹொரைசன் திட்டத்தின் கீழ் 2006 இ2016 ஆம் ஆண்டுகளில் இளைஞர் முதியோருக்கிடையே புரிந்துணர்வை மேம்படுத்தவும் தலை முறை இடைவெளியைக் குறைக்கவும் நாம் முன்னெடுத்த வெற்றிகரமான நடவடிக்கைகள் போன்று கடந்த ஆண்டில் இளம் தளிர்கள் எனும் இத் திட்டம் மன்றத்து நிதி ஆதாரங்களுடனேயே ஆரம்பித்து முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இம் முயற்சி எத்துணை தூரம் கனிந்திருக்கிறது என்பதனை மெய்நிகர் வழியே நாம் நிகழ்த்திய நிகழ்வும் மூத்தோருடன் இணைந்து சிறார்கள் நத்தார் கொண்டாட்டத்தில் பங்குபற்றி அசத்தியமையும் சான்று பகரும்.

4. பிறந்த நாள் வாழ்த்துக்கள்

வாழ்வில் தங்களது குடும்பக் கடமைகளை நிறைவேற்றி பிள்ளைகள் ஒவ்வொருவரும் தத்தமது குடும்பங்களோடு முடங்கிப் போகையில் தாம் தனியாக இருக்கிறோமே என்ற உணர்வு எட்டிப் பார்க்கும் உளநிலையில் இருக்கும் முதியோர் தங்களது பிறந்த நாளில் தாங்களும் சமூகத்தால் அவதானிக்கப் படுகிறோம் கரிசனை செலுத்தப் படுகிறோம் என உணர்கையில் எத்துணை மகிழ்ச்சி அடைகிறார்கள் என்பதை நேரிடையாக அனுபவித்தாலேயே உணர்ந்து கொள்ள இயலும். இம் மகத்தான சேவையை கடந்த இருபத்தெட்டு ஆண்டுகளுக்கு மேலாக ஒன்ராறியோ முது தமிழர் மன்றம் தொடர்ச்சியாகச் செய்து வருகிறது. இப்பணியில் தமது இறுதிக் காலம் வரை தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருந்த அமரர். மா. வேலாயுத பிள்ளை அவர்களை இந்தத் தருணத்தில் நாம் நன்றியுடன் நினைவு கூரக் கடமைப்பட்டுள்ளோம்.

மேலும் 2021 ஏப்ரிலில் ஆறு வார காலம் ஒன்ராறியோ மாநகர சபையின் அனுசரணையோடு எமது மன்றம் ( Covid - 19 Vaccine Outreach Program ) கோவிட் தடுப்பூசி எடுக்க உதவும் திட்டத்தில் செயலாற்றி எமது மக்களுக்கு தேவையான உதவிகளை வழங்கியிருந்தது. ஆண்டு தோறும் மன்ற அங்கத்தவர்களுக்காக நடத்தப்படும் உடல் உள மருத்துவ சுகாதாரக் கருத்தரங்குகள் ஆண்டுக்கு 30க்கு மேற்பட்ட அளவில் பல்வேறு துறைசார் வல்லுனர்களின் உதவியோடு சிறப்பாக நடத்தப்படுகின்றன. மன்ற நிறைவேற்று உத்தியோகத்தர் தயாரி த்து வழங்கும் நிலாமுற்றம் (Video Entertainment Program) பிரதி புதன் கிழமை தோறும் ஒரு மணி நேரம் உலகின் எப்பாகத்தில் இருந்தும் பார்த்து மகிழ முடியும். வைகறை e magazine உம் யாவரும் தம்மைப் பதிவு செய்வதன் ஊடாக வாசிக்க முடியும். இத்துணை சேவைகளையும் நாம் வழங்க முடிவதற்கு எம்மன்றத் தின் ஆற்றல் ஆளுமை அர்ப்பணிப்பு மிக்க தலைவர் மன்ற நிர்வாகப் பணிப் பாளர் ஆகியோருடன் செயற்படும் இயக்குனர் சபையும் தன்னார்வத் தொண்டர்களும் அலுவலர்களும் மற்றும் அங்கத்தவர்களும் குறிப்பாக மாநகர மாகாண மத்திய அரசுகளின் பங்களிப்பும் தான் என்பதனை உறுதி படக் கூறி உங்கள் அனைவருக்கும் என் நன்றியையும் தெரிவித்து நிறைவு செய்கின்றேன்

# இந்தியாவுக்குத் தோல்வியா?

திருகோணமலை எண்ணெய் தாங்கிகள் தொடர்பாக இந்தியாவுடன் நடத்தப்பட்டு வந்த பேச்சுக்களில் இணக்கப்பாடு ஏற்பட்டு திடீரென கடந்த வியாழக்கிழமை அது தொடர்பான உடன்பாடும் கையெழுத்திடப் பட்டிருக்கிறது. பல மாதங்களுக்கு முன்னர் இந்தியாவுடனான பேச்சுக்கள் இறுதிக்கட்டத்தை எட்டியிருப்பதாகவும் விரைவில் எண்ணெய் தாங்கிகள் இலங்கையின் வசமாகிவிடும் என்றும் கூறியிருந்தார் அமைச்சர் உதயகம்மன்பில. அப்போது இந்தியா அதனை நிராகரித்திருந்தது.

எனினும் தற்போது இந்தியாவுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களில் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் உடன்பாடு கையெழுத்திடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கம்மன்பில கூறியிருப்பதை இந்தியா மறுக்கவில்லை. திருகோணமலை எண்ணெய் தாங்கி தொகுதிகளில் உள்ள 14 தாங்கிகளை லங்கா ஐ.ஓ.சிக்கு 50 ஆண்டுகள் குத்தகைக்கு வழங்கவும் 24 தாங்கிகளை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அபிவிருத்தி செய்யவும் எஞ்சிய 61 தாங்கிகளை இரு நாடுகளும் இணைந்து உருவாக்கும் திருகோணமலை எரிபொருள் முனைய நிறுவனத்தின் மூலம் அபிவிருத்தி செய்வதற்கும் அமைச்சரவையிலும் ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது.

லங்கா ஐ.ஓ.சி நிறுவனத்துடன் உடன்பாடும் கையெழுத்திடப்பட்டிருக்கிறது. குறித்த கூட்டு நிறுவனத்தில் 51 சதவீத உரிமையை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் 49 சதவீத உரிமையை லங்கா ஐ.ஓ.சியும் கொண்டிருக்கும்.

இந்தியாவுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களில் எட்டப்பட்டுள்ள இந்த உடன்பாடு இலங்கைக்குக் கிடைத்த மிகப் பெரிய வரலாற்று வெற்றி என்றும் அமைச்சர் கம்மன்பில குறிப்பிட்டிருந்தார்.




அத்துடன் எதிர்வரும் 12ஆம் திகதி எண்ணெய் தாங்கிகளில் இலங்கைக் கொடி பறக்கவிடப்படும் என்றும் அவர் கூறியிருக்கிறார். அவ்வாறாயின், இந்தியாவுக்கு இந்த உடன்பாடு பின்னடைவாக அமைந்திருக்க வேண்டும். இந்தியா தோல்வியடைந்திருக்க வேண்டும்.

திருகோணமலை எண்ணெய் தாங்கிகளை இரண்டு நாடுகளும் மட்டுமே கூட்டாக இணைந்து அபிவிருத்தி செய்ய முடியும் என்று 1987இல் கையெழுத்திடப்பட்ட இந்திய — இலங்கை உடன்பாட்டில் வாக்குறுதி அளிக்கப்பட்டது.

அதையடுத்து 2003இல் 99 எண்ணெய் தாங்கிகளும் லங்கா ஐ.ஓ.சிக்கு 35 ஆண்டு குத்தகைக்கு வழங்கப்பட்டன. அந்த உடன்பாடு எதிர்வரும் 2038ஆம் ஆண்டு வரை செல்லுபடியாகக் கூடிய நிலையில் உள்ளது. இன்னும் 16 ஆண்டுகள் மட்டும் செல்லுபடியாகக் கூடியதாக இருந்த எண்ணெய் தாங்கிகளின் உரிமை இப்போது மேலும் 50 ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டிருக்கிறது.

அதன்படி 2072ஆம் ஆண்டு வரை திருகோணமலை எண்ணெய் தாங்கிகள் இந்தியாவின் மறைமுகமான கண்காணிப்பிலும் கட்டுப்பாட்டிலும் இருக்கப் போகிறது.

அமைச்சர் கம்மன்பில கூறுவது போல எண்ணெய் தாங்கிகளில் சிங்கக் கொடியை பறக்கவிடுவது முக்கியமானதல்ல. அதன் மீதான உரிமை தான் முக்கியமானது. எண்ணெய் தாங்கிகளின் மீதான உரிமை நிலைநாட்டப்பட்டுள்ளதாக அமைச்சர் உதய கம்மன்பில கூறுகின்ற போதும் அது எந்தளவுக்கு சரியானது என்ற கேள்வி உள்ளது.



அதாவது, 14 எண்ணெய்த் தாங்கிகள் லங்கா ஐ.ஓ.சியின் வசம் இருக்கும் வரையில், அங்குள்ள எண்ணெய் தாங்கிகள் எதிலும் வேறொரு நாடு கை வைக்க முடியாது. இலங்கையே கூட இந்தியாவுடன் கலந்தாலோசிக்காமல் எண்ணெய்த் தாங்கிகளில் திருத்தம் செய்வது உள்ளிட்ட எதையும் செய்ய முடியாது. எனவே இந்தியாவைப் பொறுத்தவரையில் இதனை தோல்வியாக கருத முடியாது. 99 எண்ணெய் தாங்கிகளையும் தானே வைத்துக் கொள்ள வேண்டும் என்று இந்தியா ஒருபோதும் கருதவில்லை. 2015ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் மோடி கொழும்புக்கு வந்திருந்த போது திருகோணமலை எண்ணெய் தாங்கிகளை கூட்டாக அபிவிருத்தி செய்து தெற்காசியாவின் எரி பொருள் கேந்திரமாக மாற்றுவோம் என்று அறிவித்திருந்தார்.

அப்போதைய அரசாங்கம் அதற்கு ஒத்துழைக்கவில்லை. அப்போது எதிர்க்கட்சியாக செயற்பட்ட தற்போதைய அரசாங்கமும் அதனை கடுமையாக எதிர்த்தது. இப்போது 61 எண்ணெய் தாங்கிகளை கூட்டாக அபிவிருத்தி செய்வதற்கு இரு நாடுகளும் இணங்கியிருக்கின்றன.

லங்கா ஐ.ஓ.சியைப் பொறுத்தவரையில் தற்போது பயன்படுத்தும் 14 எண்ணெய் தாங்கிகளை தொடர்ந்து பராமரிப்பதன் மூலம் இலங்கையில் அதன் இருப்பை உறுதி செய் ிருக்கிறது. இது இந்தியாவின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தும் ஒரு நடவடிக்கை.

அடுத்து 24 எண்ணெய் தாங்கிகளை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அபிவிருத்தி செய்யும் என்று அமைச்சர் கம்மன்பில கூறுகிறார். இது தற்போதைய நிலையில் நடைமுறைச் சாத்தியமா என்ற கேள்வி உள்ளது. மஹிந்த அமரவீர எரிசக்தி அமைச்சராக இருந்த போது திருகோணமலை எண்ணெய் தாங்கிகள் நீண்ட காலம் பயன்படுத்தப்படாமையால் பழுதடைந்து விட்டன என்றும் அதனை திருத்தியமைப்பதற்கு செலவு செய்வதை விட குறைந்த செலவில் அம்பாந்தோட்டையில் புதிய எண்ணெய் தாங்கிகளை அமைக்கவுள்ளதாகவும் கூறியிருந்தார்.

திருகோணமலையில் உள்ள 20 எண்ணெய் தாங்கிகள் பயன்படுத்த முடியாதளவுக்கு சேதமடைந்துள்ளதாக கூறப்படுகிறது. அந்த 20 தாங்கிகள், கூட்டு நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் இருக்கப் போகின்றனவா அல்லது பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வசமாகப் போகிறதா என்ற கேள்வி உள்ளது.

அது பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் இருக்குமானால் அதன் வசம் இருக்கப் போகும் பயன்படுத்தக் கூடிய தாங்கிகளின் எண்ணிக்கை வெறும் 4 ஆக மட்டுமே இருக்கும். அதனையும் கூட இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் தற்போதைக்கு திருத்தியமைக்க முடியாது. மாதாந்த எரிபொருள் கொள்வனவுக்கே நிதியை செலவிட முடியாமல் இருக்கிறது அது. இந்தியாவிடமும் ஏனைய நாடுகளிடமும் எண்ணெயை கடனாக கேட்கிறது.

இவ்வாறான நிலையில் இந்த தாங்கிகளை தனியாக அபிவிருத்தி செய்வது என்பதை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. வேறொரு நாட்டுடன் இணைந்து கூட்டாகவும் அபிவிருத்தி செய்ய முடியாது. அதற்கு இந்தியாவுடனான உடன்பாடு அனுமதிக்காது. மேலும் 61 தாங்கிகளை இரண்டு நாடுகளும் கூட்டாக அபிவிருத்தி செய்வதனால் கூட பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அரை வாசிக்கும் கூடுதலான நிதியை செலவழிக்க வேண்டும். அதற்கான நிதியும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் இல்லை. இந்தியாவிடம் கடன் பெற்றால் புதிய கட்டுப்பாடுகளுக்கு இணங்க வேண்டியிருக்கும்.


கட்டுரையாளர்:
இந்தியாவில் இருந்து
கேணல் ஹரிஹரன்




ஆக 61 எண்ணெய் தாங்கிகள் மற்றும் 24 எண்ணெய் தாங்கிகள் என மொத்தம் 85 எண்ணெய் தாங்கிகளை மீளக் கைப்பற்றியிருப்பதாக அரசாங்கம் கூறினாலும் அது நடைமுறையில் பிரயோசனமானதா என்ற கேள்வி இருக்கிறது. இந்த இணக்கப்பாட்டினால் இலங்கைக்கு பொருளாதார ரீதியாக ஆதாயம் கிடைக்காது. தற்போதைய அரசாங்கம் இதனை ஒரு பிரசாரமாக மாற்றிக் கொள்ளலாம். இந்தியாவைப் பொறுத்தவரையில் திருகோணமலை எண்ணெய் தாங்கிகளில் எரிபொருளை சேமித்து வைக்கும் திட்டங்களை உடனடியாக கொண்டிருப்பதாக தெரியவில்லை. அதனிடம் நிலத்தடி எண்ணெய் சேமிப்பு வசதிகள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ளன.

அமெரிக்காவிலேயே இந்தியா பெருமளவு எண்ணெயை சேமித்து வைத்திருக்கிறது. இலங்கையை ஒரு கடல் கடந்த எண்ணெய் சேமிப்பு மையமாக மாற்றுவதற்கு இந்தியா திட்டத்தைக் கொண்டிருந்தால் நீண்டகால உடன்பாடு ஒன்றுக்குள் நுழைந்திருக்கும்.

(20ம் பக்கம் பார்க்க)


சிவமயம்

ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சூடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# SHIVA DURGA ASTROLOGY CENTER





PRIVATE & CONFIDENTIAL



## PANDIT: KRISHNAM RAJU

**Solutions & Suggestions on:**

| | |
|---|---|
| Black Magic | Education, Family |
| Evil Spirits | Employment, Court |
| Jealousy | Husband & Wife |
| Health, Wealth | Children Problem |
| Business, Marriage | Business Prob. |
| Drinking Problem | Vasthu Prob |
| Love, Divorce | Real Estate |
| Visa Prob. | and all other Problems |

பிரபல மந்திரிமார்களும், நடிகர், நடிகைகளுக்கு ஜோதிடம் பார்த்து புகழ் பெற்றவர். கைரேகை பார்த்து, முகரேகை பார்த்து, ஜாதகம் பார்த்து, ராசி நட்சத்திரமும் பார்த்து, பிறந்த ஆண்டு திகதி பார்த்து நடந்தது நடந்துகிட்டு இருக்கிறது நடக்கப் போறது பற்றிச் சொல்லுவார்

- குடும்ப காதல் விடயங்கள், மனை விவகாரங்கள்.
- கணவன், மனைவி, காதலர் ஒற்றுமை பிணக்குகள்.
- குழந்தை சந்தான பாக்கியம், பிள்ளைகள் படிப்பு.
- திருமணயோகம், காதல் விவகாரங்கள்.
- தொழில், மனை, அபிவிருத்தி, முன்னேற்றம், லட்சுமிகடாட்சம்.
- வாகன மனைப்பொருத்தங்கள், விசாப் பிரச்சனைகள், கோட்டு வழக்கு.
- ஆரோக்கியப் பாக்கியம், வியாழ முன்னேற்றம், சேவன கோளாறும்.
- பேய் பிசாசு தொந்தரவா, எதிர்ப்பால தொந்தரவா, கண்திருஷ்டி.
- நாகதோசம் போன்ற எந்தப் பிரச்சினையாக இருந்தாலும்.

உடனே பண்டித் ஜெகதீஸ் சாஸ்திரி அவர்களை சந்தியுங்கள் வெற்றி நிச்சயம். ஏற்கனவே வேறு பல சாஸ்திரிகளை சந்தித்து மனவேதனையுடன் இருந்திருப்பீர்கள். ஒருதரம் பண்டித் ஜெகதீஸ் சாஸ்திரி அவர்களை சந்தியுங்கள் வெற்றி நிச்சயம்.

**An Expert Spirtualist treats Black Magic, Witchcraft, Jaadu, Obeau and gives 100% Immediate Protection**

880 Markham Rd, Scarborough ON M1H 2Y2
(MARKHAM RD. & PAINTED POST DR.)

**437-213-3305**



AC TOUR
ALL COUNTRIES TOUR SERVICES

# கியூபா சுற்றுலா

ஒவ்வொரு மாதங்களிலும், முதலாவது கிழமைகளிலும்,
வேறு மாவட்டங்களுக்கும், வேறு நகரங்களிற்கும்.

2022 தை மாதம் முதல் 2022 ஆனி வரை

குறைந்தது 50 பேர் கொண்ட குழுவுக்கு இந்த விலை.



| 3 STAR ★★★ | 3½ STAR | 4 STAR ★★★★ | 4½ STAR | 5 STAR ★★★★★ |
|---|---|---|---|---|
| REGUALR C$1,000 | REGUALR C$1,250.00 | REGUALR C$1,500.00 | REGUALR C$,750.00 | REGUALR C$2000.00 |
| 25% OFF C$ 750.00 | 25% OFF C$ 1,000.00 | 25% OFF C$1,250.00 | 25% OFF C$ 1,500.00 | 25% OFF C$1,750.00 |

கீழ்காணும் அனைத்திற்கும் விமானச்சீட்டு, தங்குமிடவசதி, விமான நிலையத்திற்கும், தங்குமிடத்திற்கும் பேருந்து சேவை.

காலை உணவு, மதிய உணவு, இரவு உணவு (3 நேர உணவு) மதுபானம், குளிர்பானம், சூடுபானம்.

முன்பதிவும், முற்பணமும் 3 மாதத்திற்கு முன்பு அவசியம். HST இலக்கத்துடன் பற்றுச்சீட்டு உடன் வழங்கப்படும்.

25 Crouse Road, Unit 4078,
Toronto Ontario, M1R 5P8

மேலதிக விபரங்களுக்கு : Owner & Operator
திரு. ராதா பிரான்சிஸ்சேவியர்

E-mail : a1actour.com@gmail.com
Web : www.a1actour.com
F: Facebook.com / Allccountriestour

416 644 7273    416 857 5252

# சீன வெளிவிவகார அமைச்சரின் இலங்கை விஜயமும் ஏற்படப் போகும் அரசியல் மாற்றங்களும்

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
– K.T. கணேசலிங்கம் –



சீனாவின் வெளியுறவு அமைச்சர் வாங் ஜி இந்து சமுத்திர நாடுகளுக்கு ஆரம்பித்துள்ள விஜயம் இந்து சமுத்திர விளிம்பு நாடுகளை மையப்படுத்தி அவரது விஜயம் அமைந்திருந்தாலும் ஆபிரிக்காவின் கென்யா, கொமோரோஸ் மற்றும் கென்யா ஆகிய நாடுகளுக்கும் விஜயம் செய்வதாக இருந்தாலும் தென்னாசியா நாடுகளான இலங்கைக்கும் மாலைதீவுக்கும் விஜயம் செய்வது பிராந்திய ரீதியிலான போட்டித்தன்மைக்கான வலுவை அதிகரித்துள்ளது.

இலங்கை சீனாவுடன் வெளியுறவுக் கொள்கையை கட்டமைப்பதா அல்லது இந்தியா அடங்கலாக மேற்கு நாடுகளா என்ற இழுபறிக்குள் காணப்படுகையில் சீனா வெளிவிவகார அமைச்சரின் வருகை இலங்கையின் போக்கினை அடையாளப்படுத்துவதாக அமைகின்றது. இக்கட்டுரை சீன வெளிவிவகார அமைச்சரின் இலங்கை வருகை வெளிப்படுத்தப் போகும் அரசியலை தேடுவதாகவே அமைய உள்ளது.

இலங்கை மற்றும் இந்து சமுத்திர நாடுகளுக்கான சீன வெளிவிவகார அமைச்சரின் விஜயம் குறித்து செய்தித்தொடர்பாளர் ஜாவா லிஜியன் குறிப்பிட்ட விடயம் கவனத்திற்குரியது. ஆபிரிக்க நாடுகளுக்கான விஜயமானது கடந்த 32 வருடங்களாக சீன வெளியுறவு அமைச்சு ஒவ்வொரு ஆண்டும் ஆரம்பத்தில் மேற்கொள்கின்ற விஜயமாக அமைந்திருப்பதோடு அத்தகைய விஜயம் பாரம்பரியத்தை முதன்மைப் படுத்துவதாகவும் காணப்படுகிறது. இதனைத் தொடர்ந்து இடம் பெறும் மாலைதீவு மற்றும் இலங்கைக்கான விஜயம் பாரம்பரியத்தை முதன்மைப் படுத்துவதாகவும் காணப்படுகிறது. இதனைத் தொடர்ந்து இடம் பெறும் மாலைதீவு மற்றும் இலங்கைக்கான விஜயம் தனித்துவமாக அமைகிறது.

சீன மாலைதீவு உறவு இரு நாட்டுக்குமான இராஜதந்திர உறவினை 50 ஆண்டுகள் நிறைவு செய்கின்றதெனவும் சீன இலங்கை இராஜதந்திர உறவு 65ஆவது ஆண்டை நிறைவு செய்கின்றதெனவும் சீனாவுக்கும் இலங்கைக்குமான ரப்பர் அரிசி ஒப்பந்தம் 70 ஆண்டுகளை பூர்த்தி செய்கின்றதெனவும் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய சீன செய்தித் தொடர்பாளரின் கருத்தானது சீனாவுக்கும் இந்து சமுத்திர நாடுகளுக்குமான உறவின் பாரம்பரியத்தை கோடிட்டுக் காட்டுவதாகவே அமைந்துள்ளது.

சீன வெளிவிவகார அமைச்சரின் இலங்கை விஜயம் பாரம்பரிய உறவின் தொடர்ச்சி என்பதை எத் தரப்புக்களாலும் நிராகரிக்க முடியாது. 1952களில் இலங்கையின் ரப்பரை அமெரிக்க உட்பட மேற்கு நாடுகள் கொள்வனவு செய்ய மறுத்த போதே ரப்பர் அரிசி உடன்படிக்கை இரு நாட்டுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்டது. இலங்கையின் சீனாவுடனான உறவு நெருக்கடி கால உறவாகவே கட்டமைக்கப்பட்டுள்ளது. ஆனால் அத்தகைய நெருக்கடி கால உறவு பாதுகாப்பையும் உத்தரவாதத்தையும் ஆபத்து மிக்க புவிசார் பூகோள சக்திகளை எதிர்கொள்வதற்குமான உறவாக மாறியுள்ளது. 1952கள் போன்றே 1990களுக்குப் பின்னான பனிப்போருக்கு பிந்தைய காலப் பகுதியில் அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகளின் ஒற்றைமைய உலகம் இலங்கை போன்ற சிறிய நாடுகளை கைவிட்டு இந்தியா போன்ற வளமுள்ள பெரிய நாடுகளை அரவணைத்து இயங்க ஆரம்பித்துள்ளது. இதுவே, இலங்கை — சீனாவுடனான நெருக்கத்தை அதிகரிக்க வழி வகுத்தது. அத்தகைய சந்தர்ப்பத்தில் ஆட்சியிலிருந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும் வெளி



விவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரிற்கும் இப் பாரம்பரிய உறவை பேணியமையில் அதிக பங்களிப்பு காணப்படுகிறது. இவ்வாறே இலங்கை — சீனா உறவின் பாரம்பரியம் கட்டி வளர்க்கப்படுகிறது. ஏறக்குறைய 2005 இலிருந்து 2015இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் சீன இராஜதந்திர நோக்கு நிலையிலும் இராணுவ நோக்கு நிலையிலும் 35ற்கும் மேற்பட்ட சீன இராஜதந்திரிகள் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர். எனவே சீன இலங்கை உறவு அரசியல், பொருளாதார இராணுவ நிலையினை கடந்து இராஜதந்திர உறவாக பரிணாமம் பெற்று இருக்கிறது என்பதனை கடந்த கால அவதானிப்புக்கள் உணர்த்துகிறது. அந்த வரிசையிலேயே சீன வெளியுறவு அமைச்சரின் இலங்கை விஜயம் அமைய உள்ளது. அதனை விரிவாக நோக்குதல் அவசியமாகும்.

முதலாவது இலங்கை பொறுத்து இந்தியாவின் மூத்த அரசியல்வாதியும் ஜனதா கட்சியின் மூத்த தலைவருமான சுப்பிரமணியன் சுவாமி அண்மையில் குறிப்பிட்ட கருத்து கவனத்திற்குரியதாகிறது. குறிப்பாக இந்தியா இலங்கைக்கு கடன் வழங்க மறுக்கும் சூழல் ஏற்படுமாயின் இந்து சமுத்திரத்தில் சீனாவுக்கு ஒரு இளைய சகா கிடைக்கும் வாய்ப்பு அதிகரிக்கும் எனக் குறிப்பிட்டார்.

ஆனால் உண்மையில் இலங்கை இராஜதந்திர ரீதியில் சீனாவின் நட்பு நாடாக பல தசாப்தங்களுக்கு முன்னரே இணைந்துவிட்டது. இந்திய இலங்கை உறவில் ஏற்பட்டுள்ள விரிசலும் இந்து சமுத்திரத்தில் அமெரிக்காவிற்கு ஏறபட்டுள்ள நெருக்கடியும் சீனாவை இலங்கை மற்றும் மாலைதீவுடனான அதிக நெருக்கத்தின் பிரதிபலிப்பு என்பது மறக்க முடியாது. அதன் விரிவாக்கமும் தென்னாசிய பிராந்தியத்திலும் இந்து சமுத்திர பிராந்தியத்திலும் ஏற்பட்டுள்ள அரசியல் கொதிநிலைக்கு அடிப்படையாகும்.

இவ் அடிப்படைக்குள்ளாலேயே சீன வெளிவிவகார அமைச்சரின் இலங்கை விஜயத்தை குறிப்பிட வேண்டும். இலங்கையானது இந்து சமுத்திர மூலோபாய நிலையிலும் இந்து சமுத்திரத்திற்கு அமைவாக உள்ளமையும் சீன வெளிவிவகார அமைச்சரின் தனித்துவமாகும்.

இரண்டாவது சீன வெளியுறவு அமைச்சர் பொருளாதார ரீதியான ஒத்துழைப்பை அதிகரிக்கின்ற நோக்குடனேயே இலங்கைக்கான விஜயத்தை திட்டமிட்டிருக்க வாய்ப்பு அதிகமுண்டு. காரணம் இந்தியாவுடன் கோரிய கடனை இந்தியா முழுமைப்படுத்தாத நிலையில் சீன வெளிவிவகார அமைச்சரின் வருகை முக்கியத்துவப்படுத்துவதற்கான வாய்ப்பு காணப்படுவதோடு இந்திய அரசியல் தலைவர் சுப்பிரமணியன்சுவாமி வெளியிட்ட கருத்து சாதாரணமானதாக எடுத்துக் கொள்ள முடியாது. சுப்பிரமணியன் சுவாமிக்கும் இலங்கையின் பிரதமருக்கும் இடையில் காணப்படும் தனிப்பட்ட நெருக்கம் அத்தகைய செய்தியை வெளிப்படுத்துவதற்கு வழி வகுத்திருக்க முடியும். எனவே தான் சீன வெளிவிவகார அமைச்சர் பாரியள



வான பொருளாதார ஒத்துழைப்பை இலங்கையோடு மேற் கொள்வதற்கான வாய்ப்பும் அதற்கூடாக இலங்கை இந்து சமுத்திர நாடுகளுக்கூடாக வெற்றிகரமான மூலோபாய உறவாக பலப்படுத்துவதற்கு வாய்ப்பை வழங்குவதாக அமைகிறது.

மூன்றாவது இத்தகைய சீன இலங்கை நெருக்கமானது பிராந்திய அரசான இந்தியாவை இலங்கை பொறுத்துக் கொண்டிருக்கும் அணுகுமுறை மாற்றங்களை மேற் கொள்ள திட்டமிடுவதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளது. அத்தகைய வாய்ப்பை இந்தியா மேற்கொள்ளாத சூழல் ஒன்றுக்குள் இந்தியாவை கையாளும் விதத்திலேயே திருகோணமலை எண்ணெய்க் குதங்களை மற்றும் யாழ்.குடாநாட்டில் உள்ள தீவுகளை கையாளுகின்ற நோக்கில் இலங்கை ஆட்சியாளர்கள் நகர்கின்றனர். ஆனால் அவை அனைத்தும் இந்தியாவை தனித்துவமான புதிய அணுகுமுறைக்கு செயற்படவிடாது தடுப்பதற்கான உத்திகளாகவே அமைந்துள்ளது. அத்தகைய உத்திகளை தீர்வுகளாக இந்தியா கருதாத சூழலே இந்தியாவுக்கு ஆரோக்கியமான இருப்பு உத்தரவாதப்படுத்தப் பட்டது.

நான்காவது சீன வெளியுறவு அமைச்சரின் இலங்கைக்கான பயணம் அமெரிக்க மற்றும் இந்தோ பசுபிக் நாடுகளின் நலன்களுக்கு அதிக நெருக்கடியை ஏற்படுத்தக் கூடியது. குறிப்பாக இந்தோ பசுபிக் உபாயத்தின் பிரதான நாடுகளில் ஒன்றாக இலங்கை காணப்படுகிறது. இலங்கையை அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் சீனாவிடமிருந்து விடுபட வைப்பது அதன் மூலம் இப்பிராந்திய நாடுகளிடையே சீன மேலாதிக்கத்தை முடிவுக்கு கொண்டு வரும் விதத்திலேயே குளோபல் கேட்வேயை மேற்கு நாடுகள் உருவாக்கி உள்ளது. இச்சூழலில் இலங்கையின் உட்கட்டமைப்பு மற்றும் பொருளாதார விருத்தியை முதன்மைப்படுத்தும் விதத்திலான திட்டமிடல்களை மேற்கு வகுத்துக் கொண்டிருக்கின்ற போதே சீன வெளியுறவு அமைச்சரின் விஜயம் திட்டமிடப்பட்டுள்ளது. எனவே இதனால் ஏற்படக்கூடிய நேரடி விளைவுகள் அமெரிக்க உட்பட்ட மேற்கு நாடுகளுக்கு அவர்களது திட்டமிடலை குழப்பத்திற்கு உள்ளாக்குவதோடு அவர் மீதான தீவிரத் தன்மையை ஊக்குவிப்பதாக அமைய உள்ளது.

ஐந்தாவது சீன வெளியுறவு அமைச்சரின் இந்து சமுத்திர நாடுகளுக்கான பயணமும் இந்தோ பசுபிக் உபாயமும் இப் பிராந்தியத்தில் உள்ள தேசிய இனங்கள் மீதும் தேசிய இனப் பிரச்சினைகள் மீதும் கவனத்தை ஈர்ப்பதற்கான வாய்ப்பை கொண்டுள்ளது.

அதாவது 1990களில் சோவியத் யூனியன் வீழ்ச்சி அடைந்த போது மேற்குலக ஏகாதிபத்தியங்கள் கிழக்கு ஐரோப்பிய தேசிய இனங்களையும் தேசிய இனப்பிரச்சினைகளை தீர்ப்பதிலும் அதிகளவிலான கரிசனைகளை கொண்டிருந்தனர். அத்தகைய அணுகுமுறையொன்று இந்தோ பசுபிக் உபாயத்தினூடாக பசுபிக் மற்றும் இந்து சமுத்திர நாடுகளிடையே நெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ள தேசிய இனங்கள் மீது கவனம் செலுத்துவதற்கான வாய்ப்பு காணப்படுகிறது. அதனை ஒரு உத்தியாக மேற்கு நாடுகள் பின்பற்றுவதற்கான சூழலையும் இலங்கைத் தீவில் உள்ள தேசியங்களுக்கும் உரித்துடையதாகவே உள்ளது.

(20ம் பக்கம் பார்க்க)

# திருகோணமலை எரிபொருள் தாங்கிகள் உடன்படிக்கை கைச்சாத்து! 35 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தியாவுக்குக் கிடைத்த முதல் வெற்றி

(7ம் பக்கத் தொடர்ச்சி) உடன்படிக்கையை அமல் படுத்தும் முதலாவது நகர்வை இந்தியா எடுத்துள்ளது என்பதனை தமிழ் மக்கள் புரிந்துக் கொள்ள வேண்டும் என ஜனகன் விநாயகமூர்த்தி குறிப்பிடுகின்றார்.

பொருளாதார ரீதியிலான வழிகளை உருவாக்கினால் மாத்திரமே தமிழர்களு க்கான தீர்வும் கிடைக்கும் என அவர் கூறுகின்றார். 1987ம்ஆண்டு உடன் படிக்கை மிலுள்ள ஒரு சரத்து நிறைவேற்றப்படுகின்றது என்றால் இந்தியா பொருளாதார ரீதியில் முதல் நகர்வாக காலடி எடுத்து வைக்கப்படுகின்றது.

இந்தியா தனது முதலாவது முயற்சியில் மிக ஆழமான வெற்றியை கண்டுள்ளது. இதுவரை உடன்படிக்கையில்லாது வைத்திருந்த 14 எரிபொருள் தாங்கிகளையும் இலங்கையுடன் இணைந்ததாக 61 எரிபொருள் தாங்கிகள் உள்ளடங்களாக மொத்தம் 75 தாங்கிகளை தமது ஆதிக்கத்திற்குள் இந்தியா கொண்டு வந்துள்ளது.

இலங்கையில் இந்தியா பெற்ற மற்றுமொரு வெற்றி குறித்தும் ஜனகன் விநாயகமூர்த்தி பிபிசி தமிழிடம் விளக்கினார். மற்ற நாடுகள் 856 ஏக்கர் நிலப்பரப்பிற்குள் கால் வைக்காது இந்தியா தடுத்துள்ளது. இனி அமெரிக்காவோ சீனாவோ அல்லது வேறு எந்தவொரு நாடோ அந்த கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாவது உலக போர் காலப் பகுதியிலிருந்து முக்கியத்தும் வாய்ந்த திருகோணமலை துறைமுகம் மற்றும் அதனை அண்மித்த பகுதிக்குள் எதிர்வரும் 50 வருடங்களுக்கு கால் பதிக்காது இந்தியா தடுத்துள்ளது. இந்தியா தனது ராஜதந்திர யுக்தியை முதல் முறையாக அமைதியாக செய்து பாரிய வெற்றியை பெற்றுள்ளது" என அவர் தெரிவித்தார்.

கடன்களை வழங்குவதன் ஊடாக இலங்கை மீது சீனா மேற்கொள்ளும் ராஜதந்திர ரீதியிலான நகர்வுகளை போன்று பொருளாதார உதவிகளை வழங்குவோம் என்ற உறுதியை வழங்கி இந்தியா இந்த வரலாற்று வெற்றியை பெற்றுக் கொண்டுள்ளது.

தெற்காசியாவில் மிக முக்கியத்துவம் வாய்ந்த இயற்கை துறைமுகமான, திருகோணமலை துறைமுகம் மறைமுகமாகவேனும் இந்தியாவின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

திருகோணலை துறைமுகத்தை அண்மித்து காணப்படுகின்ற இந்த தாங்கிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்குடன் இந்தியா அந்த பகுதியில் தமது பாதுகாப்பை பலப்படுத்துவதன் ஊடாக திருகோணமலை துறைமுகத்தையும் தம் வசப்படுத்தும் என்பதில் எந்தவித சந்தேகமும் கிடையாது என அவர் குறிப்பிடுகின்றார்.

திருகோணமலை எரிபொருள் தாங்கிகளை தன்வசப்படுத்தும் உடன்படிக்கையின் ஊடாக கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலப்பரப்பை தன்வசப்படுத்தி இலங்கைக்குள் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்த இந்தியா முயற்சித்துள்ளமை மிக தெளிவாக தெரிகின்ற ஒன்றாகும். நன்றி— பிபிசி

# வைரஸ் மட்டும் தான் தோல்விகளுக்கு...

முதலீட்டுக் கவர்ச்சி மிக்கதாக கட்டியெழுப்ப முடியாது. நாட்டின் பொருளாதாரத்தை நிமிர்த்த முடியாது. ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னரும் நாட்டை அவ்வாறு திட்டமிட முடியாமல் போனதன் விழைவின் மீது வைரஸ் ஏற்படுத்திய தாக்கம்தான் இன்று நாடு எதிர்கொள்ளும் எல்லாப் பிரச்சினைகளுக்கும் காரணமாகும். இந்த எளிமையான உண்மையை கண்டுபிடிப்பதற்கு தொழில்சார் திறன்மிக்க பெரிய புத்திஜீவித்தனமும் தேவையில்லை, புத்திசாலிகளும் தேவையில்லை.

# மலையக -முஸ்லிம் கட்சிகளின் ஆதரவுக்கு ரெலோ நன்றி தெரிவிப்பு!

(9ம் பக்கத் தொடர்ச்சி) நாங்களும் விளங்கிக் கொண்டோம். இருப்பினும் உங்களால் முன்வைக்கப்பட்ட மலையக மக்களின் கரிசனைகளையும் பிரதிபலித்துள்ளோம் என்பதையும் தெரிவித்து கொள்கிறோம்.

எமது மக்கள் எதிர் கொண்டிருக்கும் அரசியல் இக்கட்டிலிருந்து எம் மக்களை மீட்க நாம் முற்பட்ட பொழுது எமது தரப்பிலிருந்து எம்மை விமர்சித்தும் எதிர்ப்புகளை வெளியிட்டும் கருத்துக்களை பதிவிட்டும் தடுக்கும் முயற்சியிலும் சுயவிளம்பரங்களை தேடுவதிலும் ஈடுபட்டிருந்த வேளையில் உங்களது நாகரீகமான நடைமுறை அவர்களுக்கு ஒரு பாடமாக அமையும் என்று நம்புகிறோம்.

உங்களது அனைத்து முயற்சிகளிலும் எங்கள் ஆதரவு என்றும்போல் தொடர்ந்தும் இருக்கும் என்பதை உறுதியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம். அதே வேளை எம் மக்களின் விடிவிற்கான தொடர் பயணத்தில் நீங்கள் தொடர்ந்தும் எம்முடன் பயணிக்க விருப்புடன் கோரி நிற்கின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# உலகில் முதன் முறையாக மனிதனுக்கு பன்றி இதயம்!

(3ம் பக்கத் தொடர்ச்சி) போராட்டத்தின் கடைசித் தேர்வு இது என அறுவைச் சிகிச்சையை மேற்கொண்ட மருத்துவர்கள் தெரிவித்தனர். அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளாவிட்டால் பென்னட் இறப்பை தவிர்க்க முடியாது என மேரிலாண்ட் பல்கலைக்கழக மருத்துவ மையத்தில் உள்ள மருத்துவர்கள் தெரிவித்து விட்டனர். இதன் அடிப்படையில் பன்றி இதய மாற்று அறுவைச் சிகிச்சை மேற்கொள்ள அமெரிக்க மருத்துவக் கட்டுப்பாட்டாளரால் விசேட அனுமதி வழங்கப்பட்டது.

மனிதருக்கு பன்றி இதயத்தைப் பொருத்தி அறுவைச் சிகிச்சை செய்வது தொடர்பான ஆய்வுகள் கடந்த பல வருடங்களாக இடம் பெற்று வருகின்றன. இந்நிலையில் இந்த அறுவைச் சிகிச்சை இந்த ஆய்வின் உச்சமாக உள்ளது. இந்த அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக அமைந்தால் உலகம் முழுவதும் பலரின் வாழ்க்கையை இது மாற்றலாம் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த முயற்சி வெற்றி பெற்றால் உடல் உறுப்பு பற்றாக்குறை நெருக்கடியைத் தீர்ப்பதற்கான முயற்சியின் பெரு வெற்றியாக இது அமையும் என மேரிலாண்ட் பல்கலைக்கழக அறுவைச் சிகிச்சை நிபுணர் பார்ட்லி பி. க்ரிபித் தெரிவித்தார்.

அமெரிக்காவில் ஒரு நாளைக்கு 17 பேர் உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சைக்காக காத்திருக்கிறார்கள். 100.000 க்கும் அதிகமானோர் காத்திருப்போர் பட்டியலில் உள்ளனர் என உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சை தரவுகள் தெரிவிக்கின்றன. மனிதர்களுக்கு உறுப்பு மாற்றுஅறுவைச் சிகிச்சை தேவையை பூர்த்தி செய்ய விலங்கு உறுப்புகளைப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறு குறித்து நீண்ட காலமாகஆய்வுகள் இடம் பெறுகின்றன.

மனிதர்களுக்கு பன்றி இதய வால்வுகளைப் பயன்படுத்துவது ஏற்கனவே பொதுவானதாக உள்ளது. 2021 ஒக்ரோபரில் நியூ யோர்க்கில் உள்ள அறுவைச் சிகிச்சை நிபுணர்கள். மனிதனுக்கு வெற்றிகரமாக ஒரு பன்றியின் சிறுநீரகத்தை பொருத்தி அறுவைச் சிகிச்சை செய்தனர். மூளைச்சாவு ஏற்பட்டு உயிர்க்காப்பு கருவிகளின் உதவியோடு சுவாசித்து வந்த நபருக்கு இந்த பன்றியின் சிறுநீரகத்தைப் பொருத்தி அதை உடல் ஏற்றுக்கொள்கிறதா? அல்லது நிராகரிக்கிறதா? என்று மருத்துவர்கள் சோதித்தனர். முன்னதாக. பன்றியிடம் இருந்து வந்த சிறுநீரகத்தை. மனிதஉடல் நிராகரித்து விடக்கூடாது என்பதற்காக மரபணு ரீதியாக சில மாற்றங்கள் செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவுக்குத் தோல்வியா?

(17ம் பக்கத் தொடர்ச்சி) அத்துடன் எண்ணெய் தாங்கிகளின் அபிவிருத்திக்கு இலங்கையுடன் கூட்டு வைத்திருக்கவும் முனைந்திருக்காது. இவ்வாறான சூழலை வைத்துப் பார்க்கும் போது. இந்த உடன்பாட்டினால் இந்தியாவுக்கு இழப்புக்கள் இல்லை.

தலா 12 ஆயிரத்து 100 மெற்றிக்தொன் கொள்திறன் கொண்ட 14 தாங்கிகள், அடுத்த அரை நூற்றாண்டுக்கு இந்தியாவிடமே இருக்கப் போகிறது. அந்த தாங்கிகள் இருக்கும் வரையில் இலங்கை அரசாங்கத்தினாலும் சரி, வேறொரு நாட்டினாலும் சரி திருகோணமலைக்குள் காலடி எடுத்து வைக்க முடியாது.

இதனை மறைத்துக் கொண்டு தான் இலங்கைக்கு பெரும் வெற்றி என்றும் சிங்கக்கொடி பறக்கப் போகிறது என்றும் அவிழ்த்து விட்டிருக்கிறார் உதய கம்மன்பில. சிங்கக்கொடியைப் பறக்க விடுவோம் என்று கூறியதும் சிங்கள தேசியவாத சக்திகள் வாலை சுருட்டிக் கொள்ளும் என்பது அவருக்குத் தெரியும்.

அதனால் தான் இலங்கை பெரிதாக எதையோ சாதித்து விட்டது என்ற போதையை அவர் சிங்கள தேசியவாதிகளுக்கு ஊட்ட முற்பட்டிருக்கிறார். திருகோணமலை எண்ணெய் தாங்கிகள் விடயத்தில் இந்தியாவுக்கு இழப்பு ஏற்படுமாக இருந்தால் அது எரிபொருள் கடனையும் கொடுத்து தாங்கிகளையும் விட்டுக் கொடுக்குமா?

# சீன வெளிவிவகார அமைச்சரின் இலங்கை

(19ம் பக்கத் தொடர்ச்சி) அத்தகைய மேற்கு ஏகாதிபத்தியத்தின் அணுகுமுறையை இந்தியாவும் அனுசரித்து செயற்படுமானால் அதற்கான சூழலை இந்தியாவை நோக்கி நகரத் தப்படுமாக இருந்தால் இப்பிராந்தியத்தில் உள்ள தேசிய இனப்பிரச்சினைகள் ஏகாதிபத்தியத்தின் விருப்புக்குள் ளால் கையாளப்படுவதற்கான வாய்ப்பு அதிகம் தென்படுகிறது.

எனவே சீன வெளிவிவகார அமைச்சரின் இலங்கை விஜயம் அதிக விளைவை இலங்கை இந்திய உறவில் மட்டுமன்றி தேசிய இனங்கள் சார்ந்தும் ஏற்படுத்தக் கூடியதாக அமைய வாய்ப்புள்ளது. எனவே அதன் அடிப்படைக்கூடாக சரியான உத்திகளாக அரசுகளும் அரசுகளுக்கிடையிலான இராஜதந்திர உறவுகளும் கட்டமைக்கப்படுமாக இருந்தால் அதனூடாக இப்பிராந்தியத்தின் பொருளாதாரம், அரசியல் இராணுவரீதியிலான அம்சங்களின் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு அதிகமாக உள்ளது. அதனை கண்டறிவதற்கான அறிவும் அதற்கான செயல் வடிவமும் பிராந்திய நாடுகளுக்கும் அதன் அரசியல் தலைமைகளுக்கும் அவசியமானதாகும்.

# மாற்றத்தை ஏற்படுத்துமா பிரதமர் மோடியின் தமிழக வருகை?

(21ம் பக்கம் பார்க்க) மிக இணக்கமாக பணியாற்ற வேண்டிய தரு ணம் இது என்றும், சீனா இலங்கையின் ஊடாக இந்தியாவின் தென் பகுதியில் பாரிய அச்சுறுத்தலை மேற்கொள்ளும் போக்கில் சில நடவடிக்கைகயில் ஈடுபட்டிருப்பதால் இதனை தடுக்கவும் தற்காத்துக் கொள்ளவும் தமிழக அரசு மத்திய அரசுடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

ஆனால் ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க., எதிர்வரும் நகராட்சி மாநகராட்சி மற்றும் உள்ளாட்சி தேர்தலில் கூட்டணி கட்சியினருக்கு ஒதுக்கீடு வழங்குவதில் ஆதிக்க மனநிலையில் செயல்படுவதாக கூட்டணி கட்சியான காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், ம.தி. மு.க., கம்யூனிஸ்டுகள் கருதுகிறார்கள்.

இந்நிலையில் பாட்டாளி மக்கள் கட்சியின் தலைமையில் தமிழகத்தில் புதிய கூட்டணி உருவாக வேண்டும் என அக்கட்சியின் நிறுவனர் ராமதாஸ் தெரிவித்த கருத்தை ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ வரவேற்றிருப்பது தி.மு.க. விலுள்ள கூட்டணி கட்சிகள் ஒருமித்த நிலையில் இல்லை என்பது அப்பட்டமாக தெரிகிறது. இதனால் தி.மு.க.வின் நிலைப்பாடு என்னவாக இருக்கும்? என்பதைப் பொறுத்தே தமிழகத்தின் வருங்கால அரசியல் இருக்கும் என்பது மட்டும் உறுதி.

மின்னஞ்சல் முகவரி:-
Eelanadu.ca

# மாற்றத்தை ஏற்படுத்துமா பிரதமர் மோடியின் தமிழக வருகை?

கொரோனாத்தொற்று, ஒமிக்ரோனாகவும் ப்ளோரோனாவாகவும் உருமாற்றம் பெற்று மூன்றாவது அலை தொடங்கியிருப்பதாக செய்திகள் வெளியாகி வரும் இந்த தருணத்தில் தி.மு.க. எதிர்க்கட்சியாக பணியாற்றிய



போது உலக அளவில் கவனம் ஈர்த்த “Go Back Modi“ என்ற ஹாஸ்டாக் மீண்டும் அவசியமாகும் நிலைமையொன்று ஏற்பட்டிருக்கின்றது.

தமிழக மக்கள் நலன் சார்ந்த திட்டங்களை ஆரம்பித்து வைப்பதற்காக பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் 14ஆம் திகதி வருகை தரவுள்ளதால் மேற்படி ஹாஸ்டாக் மீண்டும் அவசியமாகும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஆனால் தி.மு.க. இம்முறை ஆட்சியில் இருக்கின்றது. இவ்வாறான நிலையில் தமிழகத்திற்கு வருகை தரும் மோடியை அக்கட்சி வரவேற்பதற்கு தயாராகி விட்டது. தி.மு.க.வில் எப்படி இவ்விதமான நேர் எதிரான மாற்றம் நிகழ்ந்தது என்ற கேள்விகள் அதிகரித்திருக்கின்றன. அதற்கு அக்கட்சியின் முக்கியஸ்தரும் பாராளுமன்ற உறுப்பினருமான கனிமொழி, பதிலளித்துள்ளார்.

அவருடைய பதிலில் மோடி மீளச் செல்ல வேண்டும் விடயத்தைப் பொறுத்தவரை கடந்த கால ஆளுங்கட்சியான அ.தி.மு.க.விற்கும் தற்போதைய ஆளுங்கட்சியான தி.மு.க.விற்கும் பாரிய வேறுபாடு இருக்கிறது. இரண்டு கட்சிகளையும் ஒரே தராசில் ஒப்பிட்டுப் பார்க்க கூடாது. விவசாயிகளுக்கு எதிரான புதிய வேளாண் சட்டங்களை பா.ஜ.க. அறிமுகப்படுத்திய போது ஆளுங்கட்சியான அ.தி.மு.க. ஆதரித்தது.

அதேபோல் குடிமக்கள் திருத்த சட்டத்தையும் அ.தி.மு.க. கண்ணை மூடிக் கொண்டு ஆதரித்தது. இந்த இரண்டு சட்டங்களையும் தி.மு.க. எதிர்க்கட்சியாக இருந்த போதும் எதிர்த்தது. ஆளுங்கட்சியாக தற்போது பணியாற்றி வரும் போதும் எதிர்க்கிறது. அதனால் பா.ஜ.க. விடயத்தில் குறிப்பாக “மோடி மீளச் செல்ல வேண்டும்“ என்ற விடயத்தில் தி.மு.க.வையும் அ.தி.மு.க.வையும் எக் காரணம் கொண்டும் ஒப்பிடக் கூடாது“ என்று குறிப்பிட்டுள்ளார்.

அதே தருணத்தில் பா.ஜ.க., நாடு முழுவதும் காங்கிரஸ் இல்லாத இந்தியாவை கட்டமைக்க வேண்டும் என்ற கொள்கையில் உறுதிப்பாட்டுடன் செயற்படுவது அனைவருக்கும் தெரிந்ததே. அக் கட்சி இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒவ்வொரு வகையான திட்டங்களை வகுத்துக் கொண்டு செயற்படுகிறது. உதாரணமாக கடந்த காலங்களில் மேற்கு வங்காள மாநிலத்தில் பூஜ்ஜியத்தில் இருந்த பா.ஜ.க.வின் நிலை அந்த மாநிலத்தில் அரசியல் செய்த மம்தா பானர்ஜியுடன் கூட்டணி வைத்து வங்காள அரசியலின் நுட்பத்தை புரிந்து கொண்டு வளர்ச்சி பெற்று தற்போது அம்மாநிலத்தின் இரண்டாவது பெரிய கட்சியாக வளர்ச்சியடைந்திருக்கிறது. அதேபோல் தமிழகத்திலும் ஒரு சாதாரண சாரணர் இயக்க தேர்தலில் வெற்றி பெற இயலாத ஹெச்.ராஜா போன்றவர்களை தேசிய செயலாளராக கொண்ட பா.ஜ.க., அவரை சட்டமன்ற உறுப்பினராக்கியது.

அதே போல் தமிழகத்தில் கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் அ.தி. மு.க.வின் துணையுடன் நான்கு உறுப்பினர்களை பெற்று சட்டப்பேரவைக்கு பா.ஜ.க. சென்றிருக்கிறது. திராவிட அரசியலின் நுட்பத்தை பார் 'ின்ற போது திராவிட கட்சிகள் எதிர்கால சிந்தனைகள் அல்லது தொலைநோக்கு பார்வைகளின்றி செயற்படுகின்றன. இது எதிர்காலத்தில் திராவிட கட்சிகளுக்கே ஆபத்தாக முடியும். அதனால் திராவிட கட்சிகளில் மூத்த கட்சியான தி.மு.க. “மோடி மீளச் செல்ல வேண்டும்“ என்ற விடயத்தில் உறுதியான நிலைப்பாட்டை தொடர வேண்டும் என்பதே பகுத்தறிவு வாதிகளின் நிலைப்பாடாகும். தமிழகத்தில் மருத்துவ கல்லூரிகளைத் தொடங்குவதற்கான அடிக்கல் நாட்டு விழாவிற்காக பிரதமர் நரேந்திர மோடி வருகை தந்தாலும் தமிழக அரசின் நீண்ட நாள் கோரிக்கையான “நீட்“ தேர்வுக்கு விலக்கு அளிக்க வேண்டுமென்ற விவகாரத்தில் மத்திய அரசு சமரசம் செய்து விலக்கு அளிக்க முன் வரவில்லை என்பதையும் இங்கு நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

இது தொடர்பாக தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், தமிழக ஆளுநரின் பரிசீலனையில் இருக்கின்றது. எனவே பாரதப் பிரதமர் நரேந்திர மோடியின் தமிழக வருகையின் போது அதனை மாணவர்களின் நலனுக்கானதாக ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. அரசு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று தமிழக மக்கள் எதிர் பார்க்கிறார்கள். எனவே கடந்த காலங்களில் பிரதமரின் தமிழக வருகையின் போது ஏற்பட்ட எதிர்ப்புகள், இந்தமுறை வருகையின் போது தேவையில்லையென்ற கருத்துக்குகள் உருவாகியுள்ளன.

ஆனால் “மோடி மீளச் செல்ல வேண்டும்“ என்பது பிரதமர் மோடியும் பா.ஜ.க. அதன் உள்ளார்ந்த தலைமை அமைப்பான ஆர்.எஸ்.எஸ். மற்றும் அதன் கொள்கையான பார்ப்பனியமும் எங்களுக்கு தேவையில்லை . பெரியார் பிறந்து, நாத்திகம், சுயமரியாதை, பகுத்தறிவு, தனித்துவமான அடையாளம் ஆகியவற்றை எம்முடைய மண்ணில் வாழும் மக்களிடம் ஏற்படுத்தியிருக்கிறார். இதனை நாங்கள் ஒருபோதும் இழக்க மாட்டோம் என்பதன் வெளிப்பாடாக இதனை கருதவேண்டும். இதன் காரணத்தினால் தான் பிரதமரின் தமிழக வருகை பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும். இந்த மாற்றம் பல ஆச்சரியங்களையும் விரைவில் ஏற்படுத்தக் கூடும் என்றும் சில அரசியல் ஆருடங்கள் வெளியாகியிருக்கின்றன.

மாநிலத்திற்கு தேவையான அனைத்து திட்டங்களுக்கான நிதி உதவி தடங்கலின்றி கிடைக்க வேண்டுமென்றால் கூட்டணியிலிருந்து காங்கிரசை கழட்டி விட வேண்டும் அல்லது காங்கிரஸை மௌனிக்க வேண்டும் என்ற பா.ஜ.க.வின் அரசியல் நிலைப்பாட்டை தி.மு.க. ஏற்றுக் கொண்டால் தி.மு.க.வையும், அதன் அரசியல் கட்டமைப்பையும் பா.ஜ.க. உடைத்து சிதைக்காது என்றும் உதயநிதி தலைமை பதவி ஏற்பதற்கு மத்திய அரசிலிருந்து எந்தவித எதிர்ப்பும் தெரிவிக்கப்பட மாட்டாது என்றும் வாக்குறுதி அளிக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகி இருக்கிறது.

ஆனால் இவை அனைத்தும் அரசியல் ரீதியிலான காரணங்களே தவிர கள யதார்த்த நிலை அல்ல என்றும் தி.மு.க.வின் மூத்த நிர்வாகிகள் உறுதியாகத் தெரிக்கிறார்கள். எனினும் பிரதமரின் தமிழக வருகை மாற்றத்தை ஏற்படுத்துவதுடன் அரசியல் ரீதியாக ஏதேனும் பக்க விளைவுகளையும் உண்டாக்கலாம். ஆனால் வேறு சிலர், தமிழக அரசு மோடி தலைமையிலான மத்திய அரசுடன் (20ம் பக்கம் பார்க்க)





உ

Govt Regd: 571/2007

**திருச்சிற்றம்பலம் அன்னதான அறக்கட்டளை**
**அனைவரும் சாப்பிட வாருங்கள்**
**தினமும் மதியம் இலவச அன்னதானம்**
**தைப்பூசம் திருவிழா அழைப்பிதழ்**

சிதம்பரம் ஸ்ரீநடராஜர் கோவிலுக்கு தரிசனம் செய்யவரும் பக்கதர்களுக்கு திருச்சிற்றம்பலம் அன்னதான அறக்கட்டளையில் தினமும் மதியம் இலவச அன்னதானம். வடைபாயசத்துடன் 1000 நபர்களுக்கு அன்னதானம் வரும் 18.01.2022 செவ்வாய்கிழமை பவுர்ணமி தைபூசத்தை முன்னிட்டு அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அனைவரும்இந்த தர்மத்தில் பங்கு கொண்டு இதன் சிறந்த பலன்களை அடைய பிரார்த்தனை செய்கின்றோம். 1000 நபர்களுக்கு அன்னதாணம் வழங்க ரூ. 50.000/- ஆகின்றது. இதில் தங்களால் முடிந்த நன்கொடைகளை செலுத்தி இதற்கான முறையான ரசீது பெற்றுக் கொள்ளலாம். இது சமயம் சிதம்பரம் ஸ்ரீ நடராஜர் கோவிலில் தங்கள் குடும்ப பெயர் நட்சத்திரங்கள் ராசி சொல்லி சங்கல்பம் செய்து உங்கள் குடும்ப நலமாக இருக்க பிரார்த்தனை செய்து அர்ச்சனை செய்து. அதன் பிரசாதங்கள் விபூதி, குங்குமம், சந்தனம், ஸ்ரீநடராஜர் போட்டோ ரசீது முறையாக அனுப்பி வைக்கின்றோம். கேட்பவர்களுக்கு கேட்ட வரம் தரும் தில்லை ஸ்ரீநடராஜர் இடத்தில் உங்கள் பிரார்த்தனைகளை செலுத்துங்கள். 2022ம் ஆண்டின் இந்த தர்மத்தில் சிறந்த பலன்களை பெற்று வாழ்க வளமுடன், வளர்க நலமுடன் ஆசீர்வாதங்கள்.

1000 நபர்களுக்கு அன்னதானம் வழங்க ரூ 50,000/-
100 நபர்களுக்கு அன்னதானம் வழங்க ரூ 5000/
10 நபர்களுக்கு அன்னதானம் வழங்க ரூ 500/
இயன்றதை செய்து இந்த தர்மத்தின் சிறந்த பலன்கள் அடைய வேண்டுகின்றோம்.




இப்படிக்கு
**ப்ரம்மஸ்ரீ.சி. நவதாண்டவ தீக்ஷிதர்**
(Bank: State Bank of India , Chidambaram Branch,
Current A/C No. 30263863248)
IFSC Code: SBIN0000823
22/10, கீழ சன்னதி, சிதம்பரம் - 608001
செல்: 93455 12976, 93645 83178, 7639043896
www.thiruchitrambalam.org
Email: sandhanasubramani1969@yahoo.com
anandhancdm2015@gmail.com




# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! மனதில் தெளிவு உண்டாகும். ஆக்கப்பூர்வமான யோசனைகளை பயன்படுத்தி வெற்றி காண்பீர்கள். கடித போக்குவரத்து அனுகூலமான பலனை தரும். பயணம் லாபகரமாக இருக்கும். வீடு மனை சார்ந்த விஷயங்களில் தொய்வு நீங்கும். குடும்பத்தினரை அனுசரித்து நடந்து கொள்வது அமைதியை தரும். கணவன், மனைவி இருவரும் சேர்ந்து எடுக்கும் முடிவுகளால் குடும்ப விஷயங்கள் சாதகமாக நடக்கும். பிள்ளைகளால் பெருமை சேரும். புதுவியாபாரம் தொடர்பான முயற்சிகள் சாதகமான பலன் தரும். உத்யோகஸ்தர்கள் முன்னேற்றம் காண்பார்கள். வேலை பற்றிய கவலை நீங்கும். பெண்கள் நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த ஒரு காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பர். மாணவர்கள் மற்றவர்களை அனுசரித்து செல்வது நன்மை தரும்.




ரிஷபராசி அன்பர்களே1 மனதில் வீண் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். நெருக்கடியான சந்தர்ப்பத்தில் உதவிகள் கிடைக்கும். எந்த காரியங்களில் ஈடுபட்டாலும் மன தடுமாற்றம் இல்லாமல் இருப்பது நல்லது. தன்னம்பிக்கை அதிகரிக்கும். வீடு மனை சார்ந்த பிரச்சனைகள் அகலும். குடும்பத்தில் சுமூகமான சூழ்நிலை காணப்படும். வாழ்க்கைத் துணை உங்களுக்கு பல விதத்திலும் உதவிகள் செய்வார். உறவினர் வருகை இருக்கும். அனுபவப்பூர்வமான அறிவுத் திறனை உபயோகித்து எதிலும் வெற்றி காண்பீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகள் சொல்லியபடி நடப்பது நன்மை தரும். பெண்களுக்கு மனதில் மகிழ்ச்சி உண்டாகும் படியான சூழ்நிலை உண்டாகும். செலவு அதிகரிக்கும். மனோ தைரியம் கூடும்.





மிதுனராசி அன்பர்களே! எந்த ஒரு விஷயத்திலும் தீர ஆலோசித்து ஒரு முடிவுக்கு வருவீர்கள். பலராலும் செய்ய முடியாத காரியங்களை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். பங்குச்சந்தையில் நல்ல மாற்றம் ஏற்படும். குடும்பத்தில் இருப்பவர்களிடம் தன்மையாக பேசி பழகுவது நல்லது. தகப்பனாருடன் வீண் தகராறு ஏற்படலாம். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் பேசி செய்யும் காரியங்கள் சாதகமான பலன் தரும். குழந்தைகளுடன் நிதானமாக பேசி அவர்களுக்கு எதையும் புரிய வைப்பது நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் இருந்த இழுபறியான நிலை மாறும். உத்யோகஸ்தர்கள் அலுவலகத்தில் கொடுத்த வேலையை சிறப்பாக செய்து முடிப்பர். மாணவர்கள் குழப்பம் இல்லாத தெளிவான மனதுடன் படித்து வெற்றி பெறுவர்.




கடகராசி அன்பர்களே! கவனத்துடன் செயல்பட்டு காரியங்களில் ஜெயம் பெறும். புத்திக் கூர்மையுடன் செயலகளை செய்து எதிலும் வெற்றி பெறுவீர்கள். வசதிகள் அதிகரிக்கும். மதிப்பும், மரியாதையும் கூடும். சுபச்செலவுகள் உண்டாகும். மனதுக்கு பிடித்த இடத்திற்கு சென்று வருவீர்கள். குடும்பத்தில் வாக்குவாதத்தையும் கோபத்தையும் தவிர்ப்பது நல்லது. வாழ்க்கை துணையுடன் அனுசரித்து செய்வது நல்லது. பிள்ளைகளை நலனில் அக்கறை தேவை. விருந்தினர்கள் வந்து செல்வர். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் அகலும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எதிர்காலம் பற்றிய திட்டங்களை வகுப்பார்கள். பெண்கள் மனதடுமாற்றம் இல்லாமல் எதையும் செய்வது நல்லது. நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த பிரச்னைகள் குறையும்.




சிம்மராசி அன்பர்களே! தெளிவான மன நிலையுடன் முன்னேற்றம் காணுவீர்கள். சுறுசுறுப்புடன் எதையும் செய்வீர்கள். எதிர்காலம் தொடர்பான திட்டங்கள் மனதில் தோன்றும். எதையும் முன்னேற்பாட்டுடன் செய்வீர்கள். விவேகம் உண்டாகும். புதிய வீடு கட்டுவதற்கான வேலைகளில் ஈடுபடுவீர்கள். வாகனவசதி ஏற்படும். குடும்பத்தில் வாக்குவாதங்கள் நீங்கும். வாழ்க்கை துணையிடமும் குழந்தைகளிடமும் அனுசரித்து செல்வது நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பாக அலைச்சல் உண்டாகும். உத்யோகத்தில் இருப்பவர்கள் ஏற்கனவே செய்த திறமையான பணிகளுக்கு உரிய நற்பலனை பெறுவார்கள். பெண்களுக்கு எந்த ஒரு காரியத்தையும் செய்து முடிக்க கூடுதல் நேரம் உழைக்க வேண்டி இருக்கும். சிக்கனத்தை கடைபிடிப்பது நல்லது. வீண் செலவை குறைப்பது நல்லது.





கன்னிராசி அன்பர்களே! சுணங்கிக் கிடக்கும் காரியங்கள் வேகம் எடுக்கும். எதையும் ஆராய்ந்து பார்த்த பிறகே அதை செய்ய முற்படுவீர்கள். தொட்ட காரியம் வெற்றியில் முடிந்தாலும் சற்று கால தாமதம் ஆகலாம். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். குடும்பத்தில் ஏதாவது ஒரு விஷயம் தொடர்பாக வாக்குவாதம் ஏற்படும். கணவன், மனைவி அனுசரித்து செல்வது நல்லது. நண்பர்கள் உறவினர்களுடன் மனஸ்தாபம் உண்டாகலாம். தொழில் வியாபாரம் வேகம் பிடிக்கும். புதிய ஆர்டர்கள் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு பிடித்தமான இடத்திற்கு வேலை மாற்றம் கிடைக்கலாம். பெண்களுக்கு எந்த ஒரு செயலை செய்யும் முன்பும் யோசித்து ஈடுபடுவது நல்லது. தேவையான உதவிகள் கிடைப்பது தாமதப்படும்.







துலாம்ராசி அன்பர்களே! பொருளாதாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். புத்தி சாதுர்யத்தை பயன்படுத்தி காரியங்களை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். பயணங்களின் போது உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் இருப்பவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபடாமல் அனுசரித்து செல்வது நல்லது. மருத்துவம் தொடர்பான செலவு ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் பங்குதாரர்களுடன் ஆலோசனை செய்து வியாபாரத்தை மேற்கொள்வது கூடுதல் லாபம் கிடைக்க வழி செய்யும். உத்யோகத்தில் இருப்பவர்கள் சக பணியாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை செய்து முக்கிய முடிவுகள் எடுப்பது நன்மை தரும். பண வரத்து திருப்தி தரும். எதையும் அவசரமாக செய்யாமல் யோசித்து செயல்படுவது நல்லது.




விருச்சிகராசி அன்பர்களே! எந்த ஒரு காரியமும் வெற்றியடைவதுடன் லாபகரமாகவும் இருக்கும். செயல்திறன் மேலோங்கும். இழுபறியாக இருந்த ஒரு சில விஷயங்கள் நல்ல முடிவுக்கு வரும். வீடு, வாகனங்கள் வாங்கும் நிலை உருவாகும். குடும்பத்தில் இருப்பவர்களால் கூடுதல் வருமானம் கிடைக்கும். முக்கிய நபர்களின் அறிமுகத்தால் நன்மை உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே சுமூகமான நிலை காணப்படும். தொழில், வியாபாரம் மிகவும் சிறப்பாக நடைபெறும். பணவரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு நிலுவையில் உள்ள பணம் கைக்கு கிடைக்கும். பெண்களுக்கு மற்றவர்கள் உதவியுடன் செய்யும் காரியங்கள் சாதகமான பலன் தரும். வீண் அலைச்சலை தவிர்ப்பது நல்லது. மாணவர்களுக்கு சக மாணவர்களுடன் பழகும் போது கவனம் தேவை.





தனுசுராசி அன்பர்களே! மகிழ்ச்சியான சம்பவங்கள் நடக்கும். திட்டமிட்டு செய்யும் பயணங்கள் வெற்றி பெறும். செலவு செய்வது பற்றி யோசனை செய்து தேவையென்றால் மட்டுமே செய்வீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். நீண்ட நாட்களாக வாங்க நினைத்த ஆடை, ஆபரணம் வாங்க நேரிடும். விருந்து நிகழ்ச்சிகளுக்கு சென்று வருவீர்கள். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் வாக்கு வன்மையால் நல்ல லாபம் கிடைக்க பெறுவர். உத்யோகஸ்தர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். பெண்கள் புத்தி கூர்மையுடன் செயல்பட்டு காரியங்களை வெற்றிகரமாக செய்து முடிப்பர். மாணவர்களுக்கு பாடங்கள் படிப்பதில் ஆர்வம் உண்டாகும். ஆசிரியர்களின் ஆதரவுடன் படித்து தேர்வில் வெற்றி பெறுவீர்கள்.




மகரராசி அன்பர்களே! ஆக்கப்பூர்வமாக செயல்பட்டு வெற்றி பெறுவீர்கள். அறிவு திறமை வெளிப்படும். உங்கள் வார்த்தைக்கு மதிப்பு உண்டாகும். உழைப்பு அதிகமாகும். உடல் ஆரோக்கியத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். குடும்பத்தில் தாய்வழி உறவினர்கள் மூலம் உதவிகள் கிடைக்க பெறுவீர்கள். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். உயர்ந்த ஆடை ஆபரணங்கள் சேரும். நன்மை தீமை அறிந்து செயல்பட்டு நன்மை கிடைக்க பெறுவீர்கள். குழந்தைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். லாபம் வரும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு அலைச்சல் குறையும். பெண்கள் எடுத்த காரியத்தை செவ்வனே செய்து முடிப்பர். சுபச் செலவு ஏற்படும். துர்க்கை அம்பாளை செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் தரிசிக்கவும்.




கும்பராசி அன்பர்களே! கடினமான பணிகளையும் செய்து முடிக்கும் துணிச்சல் ஏற்படும். மனதில் சந்தோஷம் உண்டாகும். இருக்கும் இடத்தை விட்டு வெளியில் சென்று தங்க நேரிடும். பங்குச்சந்தை மூலமாக லாபம் ஏற்படும். குடும்பத்தில் இருந்த மனஸ்தாபம் நீங்கும். உறவினர்கள் நண்பர்கள் உதவ முன்வருவார்கள். தொழில் முன்னேற்றம் காணப்படும். கடித போக்குவரத்து மூலம் தொழில் வியாபாரத்தில் லாபம் கிடைக்கும். சாமர்த்தியமாக வாடிக்கையாளர்களுடன் பேசி அவர்களை தக்க வைத்துக் கொள்வீர்கள் உத்யோகத்தில் இருப்பவர்கள் பதவி உயர்வு, கூடுதல் பொறுப்பு கிடைக்க பெறுவர். எதிலும் திட்டமிட்டு செயலாற்றுவதால் மேலதிகாரிகளின் பாராட்டும் கிடைக்கும். பெண்களுக்கு மனத்துணிவு அதிகரித்து முன்னேற்றத்துக்கு வழி வகுக்கும்.




மீனராசி அன்பர்களே! சுபநிகழ்வுகள் நடைபெறும். புகழ் கவுரவம் அதிகரிக்கும். நீங்கள் சொல்லும் ஆலோசனைகள் மற்றவர்களுக்கு கை கொடுக்கும். தைரியம் அதிகரிக்கும். பணவரத்து அதிகரித்தாலும் செலவும் வந்து சேரும். குடும்பத்தில் இருப்பவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். கணவன் மனைவிக்கிடையே இருந்த மனவருத்தம் குறையும். பிள்ளைகளின் மீது கவனம் தேவை. வாகனங்களால் செலவு உண்டு. குடும்பத்தினரின் உடல் நிலையில் கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்கள் கூடுதல் முயற்சிக்கு பிறகு நடந்து முடியும். உத்யோகத்தில் இருப்பவர்கள் அதிகாரிகள் கூறிய வேலையை செய்து முடிப்பர். பெண்களுக்கு நீண்ட நாள் பிரச்சனைகள் தீரும். மாணவர்களுக்கு. கூடுதல் மதிப்பெண் பெற மேற்கொள்ளும் முயற்சிகள் வெற்றியடையும். நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்னை தீரும்.

எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!
ஈழநாடு 29வது ஆண்டு விழா
சங்கீத சங்கமம் 2022
16 ஏப்ரல் 2022 சனிக்கிழமை

# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## சப்பிரகமுவ பல்கலைக்கழக தமிழ்ப் பேராசிரியர் கனகசபாபதி நாகேஸ்வரன்

### நயினாதீவு 1ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவில் மரபுவழி அறங்காவலர், வாகீசகலாநிதி க.நாகேஸ்வரன்

எமது அண்ணாவின் மறைவுச் செய்தியைக் கேட்டு உடன் நேரில் வந்து அனுதாபத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும், உலகளாவிய நாடுகளில் இருந்து தொலைபேசி, மின்னஞ்சல், சமூக வலய தளங்கள் ஊடாக தொடர்பு கொண்டு எமது துக்கத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும், அவரது இறுதி யாத்திரையில் கலந்து கொண்ட அனைவருக்கும், அந்தணப் பெருமக்களுக்கும், திருமுறை ஓதியவர்களுக்கும், கல்விமான்களுக்கும், மாணவர்களுக்கும், கணணி, வானொலி, பத்திரிகைகள், தொலைக்காட்சிகள், சகல பல்கலைக் கழகங்கள், ஊழியர்கள், பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், அனைத்துச் சங்கங்கள் வாயிலாக கண்ணீர் பிரசுரங்கள் வெளியிட்டோருக்கும், அஞ்சலி உரைகளை நிகழ்த்தியோருக்கும், மலர் மாலைகள், வளையங்கள் அளித்து அஞ்சலி செலுத்தியோருக்கும் மற்றும் உறவின பந்தங்களுக்கும், அவர் தம் நண்பர்கள், அன்பர்கள், மற்றும் சகலவிதத்திலும் உதவிகளை அளித்த அனனத்து உள்ளங்களுக்கும், அவர் அன்பு மனைவி மக்கள் மருமக்கள், பேரக் குழந்தைகளுக்கும், மைத்துனர்கள், அவர்தம் குடும்பத்தினருக்கும் என்றென்றும் எங்கள் இதயபூர்வமானநன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்

கூவின பூங்குயில் கூவின கோழி குருகுகள் இயம்பின இயம்பின சங்கம் ஓவின தாரகை ஒளியொளி உதயத் தொருப்படுகின்றது விருப்பொடு நமக்குத் தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய் திருப்பெருந் துறை சிவபெருமானே யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய் எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே!.

காலத்தால் அழியாத குணக்குன்றே ஞாலத்தில் உம்பெயர் என்றென்றும் நிலைத்து நிற்கும், என்று நினைவு கூர்ந்து உம் ஆத்மா சாந்தியடைய நயினை நாகம்மையின் பாதாரவிந்தங்களை பணிந்து நிற்கின்றோம்.

இங்ஙனம் அன்புடன் சகோதரர்கள்


Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE

Serving the Tamil Community OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

*At Need Funeral Arrangements*


We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- Vistation
- Funeral & Memorial Service
- Reception
- Burial • Cremation



Vilosanan Sivatharman
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

*Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க..
விற்க..
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6

RANJANI THIRUKESWARAN LAW OFFICE
• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்
2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242
Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)

மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி
NON-MEDICAL INSURANCE
நாளை பற்றி கவலையை தவிர்க்க நம்பிக்கையானது காப்புறுதி ஒன்றே!!!
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca
KABIS
• Life Insurance
• Critical Illness
• Disability
• RESP
• RRSP
• Mortgage Protection Insurance
• Travel Insurance (Super Visa)
Foresters
INDUSTRIAL ALLIANCE
Assumption Life

OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*




RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES
Aalayaa
2 VILLA ADA DRIVE, MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500

காப்புறுதிச் சேவையில் 20 ஆண்டுகள்
ஆதரவு தந்த அனைவருக்கும்
நெஞ்சார்ந்த நன்றி
DISABILITY INSURANCE
SUPER VISAS
NON-MEDICAL INSURANCE
CRITICAL ILLNESS
RRSP & RESP
AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.
647 401 5800 / 416 439 2800
218 EXPORT BLVD, MISSISSAUGA, SUITE 209-211, L5S 0A7